விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 வைகாசி 12 ஷபா 2 இதழ் 102
யாழ்ப்பாணம் புதன்கிழமை 26—5—82

## பிரபாகரன், ராகவனுக்கு ஜூன் 5 வரை ரிமாண்ட்

சென்னை, மே. 25

சென்னை பாண்டிபசாரில் கடந்த வாரம் கைது செய்யப்பட்ட பிரபாகரனும், ராகவனும் அடுத்தமாதம் 5-ம் திகதி வரை சென்னையில் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

சென்னை மெற்றபோலிட்டன் நீதிமன்றத்தில் சென்னை பொலிசாரால் ஆஜர் செய்யப்பட்ட போதே பிரபாகரனும் ராகவனும் றிமாண்டில் வைக்கப்பட்டனர்,

இதேவேளையில் இவர்கள் இருவரையும் தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு கொண்டு வருவது பற்றி தமிழக மத்திய அரசு பொலிசாருடன் பேச்சு நடத்துவதற்காக பிரதி பாதுகாப்பு அமைச்சர் திரு. ரி. பி. வெரப்பிட்டிய, இரகசிய பொலிஸ் பிரிவு அதிபர் திரு. எம். டி. ஏ. ராஜபக்ஷா, ஆகியோர் நேற்று தமிழ் நாடு சென்றனர். (இ)

### ஆங்கில ஆசிரியர்கள்

[கொழும்பு]

சிங்கள, தமிழ் மொழி மூலம் பாடசாலைகளில் ஆங்கிலத்தை கற்பிப்பதற்காக இன்னொரு தொகுதி உதவி ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இவர்களுக்கான போட்டிப் பரீட்சை ஜூலை மாதம் 3-ம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டது. (வெ)

# பிரபாகரன், ராகவன் புதிதாக எழுந்த சட்டப்பிரச்னை

# இலங்கைப் பொலிஸாரிடம் ஒப்படைக்க எதிர்ப்பு

சென்னை, மே. 25

சென்னையில் கடந்த வாரம் கைது செய்யப் பட்ட 'தமிழ் ஈழப் புலிகள்' இயக்கத் தலைவர் என்று தெரிவிக்கப்பட்ட பிரபாகரன், இவரது உதவியாளர் ராகவன் எனப்படும் சிவகுமார் ஆகிய இருவரையும் இலங்கைப் பொலிஸாரிடம் கையளிப்பதில், சட்டப் பிரச்னை தலைதூக்கியுள்ளதாக சென்னை பொலிஸ் வட்டாரங்கள் இன்று தெரிவித்தன.

தென்சென்னையில் கடந்த வாரம் நிகழ்ந்த துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தில் பிரபாகரனும், சிவகுமாரும் கைது செய்யப்பட்டதும், ஜோதீஸ்வரன், முகுந்தன் ஆகிய இருவரும் காயமடைந்து சென்னை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டதும் தெரிந்ததே.

இலங்கையின் வடபகுதி பயங்கரவாத சம்பவங்கள் தொடர்பாக தேடப்பட்டு வந்த பிரபாகரன் சென்னையில் கைதுசெய்யப்பட்டது சம்பந்தமாக விசாரணை மேற்கொள்ளவும் இந்திய மத்திய அரசின் அனுசரணையுடன் சத்

(8-ம் பக்கம் பார்க்க)

## கல்வி அமைச்சர் விஜயம் ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

கல்வி அமைச்சர் திரு.ரணில் விக்கிரமசிங்காவின் யாழ்ப்பாண விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் ஜூன் மாதம் 2-ம் திகதி யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வமாக விஜயம் செய்யவிருந்தது தெரிந்ததே [மா]

## யாழ். மருத்துவபீடத்தில் உதவி வைத்திய அதிகாரிகள் பயிற்சி ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

யாழ், பல்கலைக்கழக வைத்திய பீடத்தில் உதவி வைத்திய அதிகாரிகளுக்கான பயிற்சிகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின.

நாடு முழுவதிலும் உள்ள ஆஸ்பத்திரிகளில் பணிபுரிந்த மருந்தாளர்களில் 33 பேர் இப்பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 23பேர் தமிழர்கள். இவர்கள் 23 பேருமே யாழ் மருத்துவ பீடத்தில் பயிற்சிக்காக அனுப்பப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் வடக்குகிழக்கு மாகாணங்களிலிருந்து தொகுதிக்கு ஒருவர் வீதம் தெரிவு செய்யப்பட்ட கல்விப்பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் சித்திபெற்ற 21பேரும் இரண்டு தாதிமாரும் யாழ். மருத்துவ பீடத்தில் பயிற்சிபெற்று வருகின்றனர்.

இவர்கள் ஆறுமாதம் யாழ். மருத்துவ பீடத்திலும் மிகுதி இரண்டு மாதமும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் பயிற்சிபெறுவர். (இ)

## விமலராசா விவகாரம்: 'அமிர்' கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கைது செய்யப்பட்டிருக்கும் யாழ். பல்கலைக்கழகமாணவன் விமலராசாவை விடுதலைசெய்விக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் ஏற்பட்டிருப்பதால் இது சம்பந்தமாக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி பல்கலைக்கழகத்தின் உள்ள உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவதற்கு ஏற்பாடுசெய்யுமாறு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரை

[8-ம் பக்கம் பார்க்க]

## ★ யாழ். பல்கலைக்கழக மாணவர் உண்ணாவிரதம்:

# விமலராசாவின் தாயார் பழரசம் வழங்கி இன்று உண்ணாவிரதம் முடித்துவைப்பார்

### மயக்கமான நிலையில் ஐந்து மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்டிருந்த மூன்றுநாள் உண்ணாவிரதப் போராட்டம், இன்று பிற்பகல் 4 மணியுடன் முடிவடையும் என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் அவைத்தலைவர் திரு. கே. என். இராசநாயகம் தெரிவித்தார்.

400 நாட்களுக்கு மேலாக இராணுவமுகாமில் சிறையிருக்கும் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடமாணவன் திரு. அப்புலிங்கம் விமலராசாவின் தாயார் திருமதி அப்புலிங்கம், உண்ணாவிரதமிருந்த மாணவ, மாணவிகளுக்கு பழரசம் வழங்கி உண்ணாவிரதத்தை முடித்துவைப்பார்.

யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 62 மாணவ மாணவிகளுடன் கடந்ததிங்கட்கிழமை ஆரம்பமான உண்ணாவிரதத்தில் நேற்றுக்காலை மேலும் 100 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களின் பெற்றோரும் நேரில் சமூகமளித்து ஆதரவு நல்கினர்.

நேற்று நண்பகல் இருமாணவர்களும், பிற்பகல் மூன்று மாணவர்களும் மயக்கமடைந்ததைத்தொடர்ந்து, சிகிச்சைக்காக யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட வைத்தியசாலைக்கு பல்கலைக்கழக அம்புலன்ஸ் வண்டியில் எடுத்துச் செல்லப்பட்டனர்.

திங்கட்கிழமை தொடக்கம் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த மாணவ மாணவிகள் மிகவும் சோர்ந்து களைப்படைந்த நிலையில் காணப்பட்டனர். [மா]

## ரூ. 96 லட்சம் நஷ்டஈடு கோரி வழக்கு!

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் வன்செயலால் பாதிக்கப்பட்ட 56 வர்த்தகர்கள், தொண்ணூற்றி ஆறரை லட்சம் ரூபா நஷ்டஈடு கோரி யாழ்.நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

யாழ். மாவட்ட பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி திரு.கிருஷ்ணதாசன் இவ்வழக்கைத்தாக்கல் செய்துள்ளார். (மா)



"ஸ்ரீமுருகன்ஸ்"
புதுக்கடைத்
திறப்புவிழா

27-05-82 (நாளை) வியாழக்கிழமை
காலை 10.30-10.47 சுப முகூர்த்த வேளை

திரு. சி. கனகரத்தினம் அவர்கள்
(சட்டத்தரணி, வடபிராந்திய போக்குவரத்துச்சபை தகுதிவாய்ந்த அதிகாரி)
ஸ்தாபனத்தை திறந்துவைப்பார்.

சிவதர்மவள்ளல் திரு. க. கனகராஜா அவர்கள்
(தொழிலதிபர் மில்க்வைற் நிறுவனம்)
விற்பனவை ஆரம்பித்துவைப்பார்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

140, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
3328

இவ்வண்ணம்
ஸ்ரீமுருகன்ஸ்.
ஸ்தாபனத்தார்

## திருக்கேதீஸ்வர உற்சவம்

(திருக்கேதீஸ்வரம்)

திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

அடுத்த மாதம் 5-ம் திகதி ரதோற்சவமும் மறு நாள் உருத்திரா அபிஷேகமும் நடைபெறும்.

ரதோற்சவ தினத்தன்று தமிழக பிரபல நாதஸ்வர வித்துவான்கள் நாமகிரிப் பேட்டை கிருஷ்ணன் சகோதரர்களின் நாதஸ்வரக்கச்சேரி இடம்பெறும்.

## வங்கி கொள்ளைமுயற்சி தோல்வி!

சென்னை, மே. 25

கோயம்புத்தூரில் ஸ்டேட் வங்கியொன்றைக் கொள்ளையடிக்க நான்கு இளைஞர்களினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வியடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

இவ் இளைஞர்கள் வங்கி அதிகாரியைப் பயமுறுத்தி வங்கி திறப்புக்களை பெற எடுத்த முயற்சி தோல்வியடைந்ததாக கூறப்பட்டது. (வெ)

# வரி விளம்பரம்

### வாடகைக்கு

பெரியகடை சூழலில் 4 அறைகள், வியாபாரிகள் பாவிப்பதற்கோ, டியூட்டறிகளுக்கோ அல்லது உத்தியோகத்தர் (தனி ஆண்கள் தங்குவதற்கோ ஏற்றது. விபரம்: 142, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 3319

பெரியாஸ்பத்திரி, பெரிய கடை, பெரிய இந்துக்கல் லூரிகள் மத்தியில் நவீன வசதியுடன் தராதரமான அழகிய வீடுகள் சிறிய குடும்பத்திற்கு டாக்டர் போன்ற உத்தியோகஸ்தர்கட்கு ஏற்றது. பெண் ஆசிரியை போன்ற இரு பெண்கள் சீவிப்பதற்கும் பாதுகாப்பானது. 19, கடைச்சாமி வீதி, நீராவியடி, நாவலர் வீதிக்கப்பால், 3318

கலர் ரி. வி. நஷனல் பனசொனிக் – 27'' (Electronic Remote Control) வீடியோ நஷனல் பனசொனிக் NV–7200 213, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 3295

மருதனுமடம் சந்தியில் 1 பரப்புக் காணியும் 2 கடையுடன் மேல் மாடிக் கட்டிடமும் (தேவிவிலாஸ்). தொடர்பு கொள்ளவும்:– W. S. செந்தில்நாதன் சட்டத்தரணி, 167, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 3284

தட்டச்சு யந்திரங்கள் விற்பனைக்குண்டு தொடர்பு: நிர்வாகி, சங்கா ஹாட்லி இன்ஸ்ரியூட், பிரதான வீதி, பருத்தித்துறை. 3142

### பயிற்சி

வெல்டிங் மோட்டார் மெக்கானிசம் வயறிங் [செய்முறை அறிமுறையுடன் புதிய வகுப்புகள் ஆரம்பம் 29–05–82 J. E. C. 33 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம், புகையிரதக்கடவைக்கு அருகில். 3313

### தேவை

காரைநகர் துறைமுகம் சித்திரக்கூட சித்திவிநாயகர் ஆலயத்திற்கு புதிய சித்திரத்தேர் ஒன்று செய்வதற்கு உத்தேசித்து உள்ளோம். தகுதியானவர்கள் இதற்குமுன் தேர் செய்த விபரங்களுடன் கீழ் காணும் முகவரிக்கு31–5–82க்கு முன் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். க. சோமசேகரம், சோமன்ஸ், கருங்காலி, காரைநகர். 3322

எமது ஸ்தாபனத்தில் நிர்வாகஸ்தராகவும், பங்குதாரராகவும் வேலைசெய்வதற்கு ஐந்து இளைஞர்கள் தேவை. விண்ணப்பிக்க: Trade and Management Services, 72காரைநகர்வீதி, யாழ்ப்பாணம். 3309

## பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் மன்னார் பெரிய கடை, முஸ்லிம் ஹோட்டலைச் சேர்ந்த காலஞ்சென்ற S.P. முகம்மதுவின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன )
நியாயாதிக்கம் ) இல. T/ 4/81

இந்தியா. கேரளா, கனனூர் மாவட்டம், P. O. படிரியாட், S. P. வீடு S. P. முகம்மது கைம்பெண் S.P. சைனபா.

மனுதாரர்

எதிர்

மேற்படி P. O. படிரியாட் S. P. வீடு]
1. S. P. அப்துல்காதர்
2. S. P. பீவி
3. S. P. சக்கீனு
4. S. P. ஷரீப்
5. S. P. மறியம்
மன்னார், உப்புக்குளம்
6. P. B. காதர்

(1ம், 2ம். 3ம், 4ம். 5ம் பராயமற்ற எதிர் மனுதாரிகள் 6ம் எதிர் மனுதாரின் பாதுகாப்பாளர்)

எதிர் மனுதாரிகள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் தற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதிபப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்சப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981ம் ஆண்டு வைகாசி மாதம் 17 ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னம் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம் N. ஜெகநாதன்
பதிவாளர்

1981ம் ஆண்டு பங்குனி மாதம் 30ம் திகதி.

17–5–1981நீடிக்கப்பட்டுள்ளது 14–7–81
ஒப்பம் H.M.S.B. மடவல D. J.

14–7–81 நீடிக்கப்பட்டுள்ளது 8-9-81
ஒப்பம் H.M.S.B. மடவல D. J.

8–9–81 நீடிக்கப்பட்டுள்ளது 20–10–81
ஒப்பம் H.M.S.B. மடவல D. J.

20–10–81 நீடிக்கப்பட்டுள்ளது 15–12–81
ஒப்பம் N. ஜெகநாதன் பதிவாளர்

15–12–81 நீடிக்கப்பட்டுள்ளது 2–2–82
ஒப்பம் N ஜெகநாதன் பதிவாளர்

2–2–82 நீடிக்கப்பட்டுள்ளது 23–3–82
ஒப்பம் N. ஜெகநாதன் பதிவாளர்

23–3–82 நீடிக்கப்பட்டுள்ளது 4–5–82
ஒப்பம் N. ஜெகநாதன் பதிவாளர்

4–5–82 நீடிக்கப்பட்டுள்ளது 15–6–82
ஒப்பம் N. ஜெகநாதன் பதிவாளர்

2842

# "ஒற்றுமைபேணாத இனம் அழிந்தொழிந்துபோகும்"

## சனசமூகவிழாவில் 'அமிர்' உரை

[பண்டத்தரிப்பு]

"எமது இலட்சியத்தை அடைவதற்கு வேகம் மாத்திரம் இருந்து விட்டால் போதாது. விவேகமும், நிதானமும் இருக்க வேண்டும். எடுத்த கருமத்தை நிறைவேற்ற ஒற்றுமை நிலவ வேண்டும். உலகில் ஒற்றுமைபேணப்படாத இனங்கள் பல அழிந்து ஒழிந்து போன வரலாறுகள் பலவுண்டு. கடல் கடந்து சென்று தம்மிடையே முட்டி மோதிக்கொண்ட தம்பிமார்கள்பற்றி பத்திரிகைகள் வாயிலாக அறிந்தோம். ஒற்றுமை நீங்கில் எந்த அளவுக்கு பின்தள்ளப்படும் என்பதை எமது மக்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்"

இவ்வாறு மாதகல் இளைஞர் சங்க சனசமூக நிலையத்தின் 45ஆவது ஆண்டு நிறைவுவிழாவில் பிரதம அதிதியாககலந்து கொண்டு உரையாற்றுகையில் எதிர்க்கட்சித் தலைவரும் காங்கேசன்துறைத் தொகுதி எம். பியுமான திரு அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

நிலையத் தலைவர் திரு. இ. நாகராஜன் தலைமையில் கடந்த ஞாயிறு இரவு நடைபெற்ற இவ்விழாவில் திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

"மகாத்மா காந்தி தலைமையில் இந்திய சுதந்திரப் போராட்டம் நடைபெற்ற வேளையில் ஏழை மக்களின் பொருளாதார அபிவிருத்திக்கான செயல் திட்டங்களையும் நிர்மாணத் திட்டங்களையும் இந்திய தேசியக் காங்கிரஸ் மேற்கொண்டிருந்தது அந்நிய இறக்குமதிகளை பகிஷ்கரித்து கைத்தறி ஆடைகளை அணியும் இயக்கம் உட்பட மக்களின் வாழ்க்கைத் தரத்தைஉயர்த்த வல்ல பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. சுதந்திரம் பெறும் வரை மக்கள் உயிர் வாழவேண்டும். உரிமைகளுக்காக போராடும் வேளையில் மக்களை வாழ வைக்கவும் வேண்டும். இதையே எமது கூட்டணியும் பின்பற்றி வருகின்றது"

கடந்த 19ம் திகதியன்று நாம் அரசுடன் நடாத்திய உயர்மட்டப் பேச்சுவார்த்தையின் போது கடந்த ஆண்டில் யாழ்ப்பாண நகரில் இடம்பெற்ற வன்செயல்களின் போது சொத்துக்களை இழந்து நிர்க்கதிக்குள்ளான சுமார் 360 பேருக்கு ஒரு கோடி ரூபாவுக்கு மேற்பட்ட தொகை நஷ்டஈடாக கிடைக்க வகை செய்துள்ளோம். அரசின் பொலிஸ் படை செய்த பாவத்திற்கு பிராயச்சித்தமாக – தண்டப் பணமாக இந்த நஷ்டஈட்டை பாதிக்கப்பட்டவர்களுக்குநாம் வாதாடி அரசிடமிருந்து பெற்றுக் கொடுப்பதில் தவறில்லை. அதேபோல பொலிஸ் படையிலும் தமிழர்கள் விகிதாசாரத்திற்கேற்ப தெரிவு செய்யப்படவேண்டும் என்று நாம் விடுத்த கோரிக்கையை நிறைவேற்றித் தருவதாக அரசு தரப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவும் பொலிஸ் மா அதிபருக்கு உடன் வழங்கப்பட்டுள்ளது. தகுதியும், உடலுறுதியும் மிக்க எமது இளைஞர்கள் தவறாது இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பொலிஸ் சேவைக்கு விண்ணப்பங்கள் கோரப்படும் போது தங்கள் விண்ணப்பத்தை அனுப்பிவைக்க வேண்டும்"

திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் உரையாற்றுகையில் முன்னர் எமது தலைவர்கள் ஒருவருக்கொருவர் ஒற்றுமையின்றி பிளவுபட்டு நின்றதன் பலனாகவே தமிழினம் உரிமைகளற்ற இனமாக இந்நாட்டில் பின்தள்ளப்பட்டது என்றும் அந்த நிலைமை இனிமேலும் ஏற்பட இடம் வைக்கக் கூடாது என்றும் குறிப்பிட்டார்.

இவ்விழாவில் மாதகல் செல்வா. திரு. வெ. சாந்திகுமார் உட்பட பலர்உரையாற்றினார்கள். பட்டிமன்றமும் நடைபெற்றது. விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் வழங்கினார். இறுதியில் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. நிலைய செயலாளர் திரு. மா. தேவபாலன் நன்றி கூறினார்.


J.E.C.

33, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்
றெயில்வே கடவைக்கு அருகில்
G. C. E. O/L 1982 Dec.
(பகல், மாலை, வார இறுதி வகுப்புகள்)
ஆரம்பம்: 5-06-82

3067


## முதலாவதுஆண்டு நினைவு அஞ்சலி

இணுவில் மக்லியட் வைத்தியசாலை. தெல்லிப்பழை வைத்தியசாலை ஆகியவற்றின் சத்திரசிகிச்சை அரங்கின் முன்னாள் உதவியாளர்

செல்வி. சு. முத்துப்பிள்ளை (செல்லா)

தோற்றம்

22 - 7 - 1918



மறைவு

26 - 5 - 1981

எங்கள் அருமைச் 'செல்லா'வின் ஆன்மா ஈடேற வேண்டுமென என்றும் இறைவனைப் பிரார்த்திக்கும் அன்புச் சோதரிகள், பெருமக்கள், மைத்துனன், மருமகள், பேரப்பிள்ளை.

விஷ்ணுபவனம்
மருதனமடம்.

3306






## பீடாரோகணம்

அளவையூர் தவளகிரி அருள்மிகு முத்துமாரியம்பாள் தேவஸ்தானத்தில் ஸ்ரீ நடராஜப் பெருமான் திருமண்டபத்தில் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிவாத்துவித நெறியாகிய வீர சைவத்தை விளங்க வைக்கும் பொருட்டு முன்னோர்களால் ஸ்தாபிக்கப்பட்ட நகுலகிரி [கீரிமலை] ஸ்ரீ இரேணுகாசிரம குருபீடத்தின் ஒன்பதாவது பீடாரோகண பட்டாதிகார முடிசூட்டுவிழா பெருந்திரளான பக்தர்கள் முன்னிலையில் வெகு விமரிசையாக நடைபெற்றது,

பக்தர்களும் அன்பர்களும் குழுமியிருந்த இப் பெருவிழாவிலே சிவஸ்ரீ ஐ. கிரீடவசவேஸ்வரையா உருத்திரபுரீஸ்வரையா அவர்கள் ஒன்பதாவது பட்டமாக முடி சூட்டப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து நகுலகிரியில் (கீரிமலை) ஸ்ரீ இரேணுகாசிரமத்தில் பீடாரோகணமும் பாத பூசையும் நடைபெற்றது. இவ்வைபவத்திலும் பெருந்திரளான மக்கள் கலந்து சிறப்பித்தார்கள்.

பின்னர் பிற்பகல் 2மணியளவில் சிவசரணர்களுக்குப் பாத பூசையும் மாகேஸ்வர பூசையும் நடைபெற்று விழா இனிது நிறைவெய்தியது.


(I.C.M.A. Foundation Stages 'A & B')

By D. R. E. C.

(Conceived by the late Mr. C. Loganathan)

Commencing 5th June, 9-00 a. m.
Those interested are invited to an introductory lecture on 29th May at 9-30 a. m. at our Centre.

D. R. E. C.
15. Sriambiady Lane, Jaffna.

போக்லண்ட் நெருக்கடி

# பாப்பரசரின் கோரிக்கை தட்சர் நிராகரிப்பு

## ஆயினும் லண்டன் செல்கிறார்

ரோம் மே 25

போரைநிறுத்தும்படி பரிசுத்த பாப்பரசர் பிரிட்டனுக்கு விடுத்த வேண்டுகோளை பிரதமர் திருமதி மார்கிரெட் தட்சர் நிராகரித்துள்ளார்.

ஆர்ஜென்டீனா - பிரிட்டன் கத்தோலிக்க அதிமேற்றிராணிமார்களை வத்திக்கானுக்கு அழைத்து அவர்களுடன் சமாதானத்துக்காக பிரார்த்தித்த பின்னரே பாப்பரசர் போரை நிறுத்தும்படி பிரிட்டிஷ் பிரதமருக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

இதேவேளையில் பிரிட்டனுக்கு விஜயத்தை மேற்கொள்ளவிருக்கும் பாப்பரசர் போர் மூண்டிருப்பதால் தனது விஜயத்தைத்தவிர்த்துக் கொள்வாரோ எனச்சந்தேகிக்கப்பட்டபோதிலும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை திட்டமிட்டபடி பாப்பரசர் பிரிட்டனுக்கு விஜயம் செய்வார் என வத்திக்கான் வட்டாரங்கள் தெரிவித்தன.

புரட்டஸ்தாந்து மதத்தினரைப் பெருமளவு கொண்டிருக்கும் பிரிட்டனுக்கு கத்தோலிக்க பாப்பரசர் ஒருவர் விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும்.

இவ் விஜயம் 4 நூற்றாண்டுகளுக்குப்பின்னர் பாப்பரசர் ஒருவரால் மேற்கொள்ளப்படுகிறது.

### வரவேற்பளிக்க ஏற்பாடு

பரிசுத்த பாப்பரசர் ரோமன் கத்தோலிக்கத்திருச்சபைக்கும் புரொட்டஸ்தாந்து மதத்துக்குமிடையே நிலவி வரும் கசப்புணர்வுகளை நீக்கும் வகையிலேயே இவ்விஜத்தினை மேற்கொள்ளவிருக்கிறார் பாப்பரசரின் விஜயத்தையொட்டி லண்டனில் அவர்செல்லவிருக்குமிடங்களிளெல்லாம் பிரமாண்டமான வரவேற்பு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பாப்பரசர், பிரி. பிரதமருக்கு விடுத்த சமாதான வேண்டுகோள் நிராகரிப்பட்டிருப்பதுடன் போர்ட் ஸ்ரான்லி நகரை நோக்கி முன்னேறுமாறு பிரிட்டிஷ் துருப்புக்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (இ)

# "பாடசாலையின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவர்"

## சொக்கனுக்கு பாராட்டு

[யாழ்ப்பாணம்]

கோண்டாவில் இராமகிருஷ்ணமிஷன் மகாவித்தியாலய அதிபராகவிருந்து பலாலி ஆசிரிய கலாசாலை தமிழ் விரிவுரையாளராக சென்றுள்ள திரு. க. சொக்கலிங்கத்துக்கு (சொக்கன் வித்தியாலய ஆசிரியர் கழகம் பிரியாவிடை அளித்து கௌரவித்தது.

பதிலதிபர் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் கழகச் செயலாளர் திரு. எஸ். பாலசுப்பிரமணியம் பேசுகையில்; திரு. க சொக்கலிங்கம் இவ் வித்தியாலயத்தில் குறுகிய காலம் அதிபராக பணியாற்றியபோதும் அக் குறுகிய காலத்தில் வித்தியாலயம் பல துறைகளில் வளர்ச்சியடைந்தது என்றார்.

அவர் மேலும் பேசுகையில்; மாணவர்களோடும் ஆசிரியர்களோடும் அன்பாகவும் பண்பாகவும் பழகி அவர்களின் நன்மதிப்பைப் பெற்ற சொக்கனின் இடமாற்றம் இப் பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெரும் இழப்பாகும் என்றார்.

எமது வித்தியாலயத்தைத் தமது குடும்பம்போல் பாவித்துத் தமது சேவையைச் செய்ததால் இங்குள்ள மாணவர்கள் ஆசிரியர்களின் இதயங்களில் நீங்காத இடத்தை அவர் பெற்றுவிட்டார் என்றும் எமது நாட்டில் குறிப்பிடத்தக்க கல்விமான்களில் இவரும் ஒருவர் என்றும், ஈழத்தின் தலைசிறந்த தமிழ் எழுத்தாளர்களில் ஒருவர் என்றும், இவர் கலந்து கொள்ளாத இலக்கியக் கூட்டங்களே இல்லை, என்றும் திரு. பாலசுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

# பிரிட்டனின் 'அண்டிலோ' போர்க்கப்பல் மூழ்கடிப்பு

போர்ட் ஸ்ரான்லி மே 25

போக்லண்ட் தீவுகளில் இறங்கியிருக்கும் பிரிட்டிஷ் போர்வீரர்கள் மீது கடுமையான தாக்குதல்களை ஆர்ஜென்டீனா முடுக்கி விட்டிருக்கின்றது.

'சென் காலோஸ்' என்ற பாதுகாப்பற்ற போக்லண்ட் தீவின் கரையோரப் பகுதியொன்றினூடாக இறங்கியிருக்கும் பிரிட்டிஷ் துருப்புக்கள் மீது எவுகணைப், பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆயினும் தாம் நிலை தளராது நிற்பதாக லண்டனிலுள்ள பாதுகாப்பமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிரிட்டனின் மற்றுமொரு போர்க்கப்பலான 'அன்டிலோ' வும் ஆர்ஜென்டீனா போர் விமானங்களால் நாசமாக்கப்பட்டுள்ளது 3250 தொன் நிறையுள்ள போர்க்கப்பலான 'அன்டிலோ' 1975ம் ஆண்டிலிருந்து சேவையிலீடுபடுத்தப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பிரிட்டிஷ் துருப்புக்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டு வரும் இதேவேளையில் பிரிட்டிஷ் துருப்புக்களும் பதில் தாக்குதல்களில் மும்மரமாக ஈடுபட்டு வருகின்றன 'சென் காலோஸில்' பாசறையமைத்திருக்கும் பிரிட்டிஷ் துருப்புக்கள் ஆர்ஜென்டீனாவின் ஏழு குண்டுவீச்சு விமானங்களை சுட்டு வீழ்த்தியிருப்பதாக அறிவித்துள்ளன. [கி இ]

# அச்சுவேலி ப. நோ. கூ. ச. கொள்ளை:

# 1-ம், 2ம் எதிரிகள் சார்பில் லட்ச ரூபாவிற்கு பிணை நின்றவர்கள் விடுதலை

## புதிய குற்றப்பத்திரம் தாக்கல்

(அச்சுவேலி

அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கொள்ளை வழக்கில் 1ம், 2ம் எதிரிகளுக்காக ஒரு லட்சம் ரூபா பிணை நின்றவர்கள் விடுதலைசெய்யப்பட்டனர் இவ்வழக்கில் புதிய குற்றப்பத்திரம் தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜாமீல் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் அச்சுவேலி ப. நோ. கூ. சங்கத்தில் 40 ஆயிரம் ரூபாவை, 13-9-77ல் கொள்ளையடித்ததாக திரு. அருமைச்சந்திரன் க. குமணகரன், த. உதயணன் ஆகியோர் மீது குற்ற சாட்டப்பட்டிருந்தது

1-ம், 2-ம் எதிரிகள் தலா 50,000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் இருவரையும் செ. கனகராசா, மகமாசியம்மா நாராயணசாமி ஆகியோர் பிணை எடுத்திருந்தனர்.

பிணையில் சென்ற 1ம், 2ம் எதிரிகள் அடுத்தடுத்த தவணைகளுக்கு நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியதால் பிணைநின்றவர்கள் அழைக்கப்பட்டனர். பிணைப்பணம் ஒரு லட்சம் ரூபாவைப் பறிமுதல் செய்ய அரசதரப்பில் விண்ணப்பிக்கப்பட்டது

இதனை ஆட்சேபித்து பிணைக்காரர் சார்பில் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம், சட்டத்தரணி கனகமனோகரன் உதவியுடன் ஆஜராகி வாதாடினார்

(6ம் பக்கம் பார்க்க)

# பிரிட்டனில் எதிர்க்கட்சிகள் யோர்க்கொடி

# போக்லண்டில் போரைநிறுத்தக்கோரி லண்டனில் ஊர்வலம்

லண்டன், மே 25

போக்லண்ட் தீவுகளில் உடனடியாகப் போரை நிறுத்துமாறு பிரிட்டிஷ் அரசைக் கோரி லண்டனில் சுமார் 3 ஆயிரம் பேர் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

பிரிட்டனின் பிரதான எதிர்க்கட்சியான தொழிற்கட்சியைச் சேர்ந்தவர்களும் இடதுசாரியினரும் இந்த ஊர்வலத்தின் முன்னே சென்றனர். அவர்களைத் தொடர்ந்து லண்டனில் குடியேறியிருக்கும பல இன மதங்களைச் சேர்ந்தோரும் சுலோக அட்டைகளையும், பதாகைகளையும் ஏந்திச் சென்றனர். இவர்களில் பௌத்தர், சீனர், ரோமன் கத்தோலிக்கர்கள் ஆகியோர் தத்தமது மத சம்பிரதாயங்களுக்குரிய உடைகளை அணிந்து சென்றனர்.

ஊர்வலம் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை மழை பெய்து கொண்டிருந்ததாயினும் அதனைப் பொருட்படுத்தாது கோஷங்களை எழுப்பியபடியும் வாத்தியக் கருவிகளை இசைத்தபடியும் ஊர்வலக்காரர்கள் சென்று கொண்டிருந்தனர்.

### தள்ளுவண்டிகளில் கைக்குழந்தைகள்

சிறுவர்களும் இவ்வூர்வலத்தில் கலந்து கொண்டிருந்தது டன் குழந்தைகளையும் பெற்றோர் தள்ளுவண்டிகளில் வைத்துக்கொண்டு சென்றனர்.

"போக்லண்ட் நெருக்கடியைச் சமானமாகத் தீர்த்து வை" "தென் அத்லாந்திக் பகுதிக்குச் சென்ற பிரிட்டிஷ் போர் வீரர்களை உயிருடன் திருப்பி அழை" ஆகியன உட்பட பல சுலோகங்கள் ஊர்வலக்காரர் தாங்கிச் சென்ற அட்டைகளிலும், பதாகைகளிலும் பொறிக்கப்பட்டிருந்தன. கி-இ

குறிப்பிட்ட சில இடங்களில்

# பொலிஸ் இராணுவம் ரோந்து அதிகரிப்பு

(மாவிட்டபுரம்)

காங்கேசன் துறைப்பகுதியில் குறிப்பிட்ட சில இடங்களில் பொலிஸ் இராணுவ ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன,

பயங்கரவாத சந்தேக நபர் ஒருவர் இந்தியாவிலிருந்து இங்கு வந்துள்ளதாக கூறப்படும் தகவலையடுத்தே இந்த நடவடிக்கை என்று தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக கட்டுவன், குரும்பசிட்டி, வர்த்தலைவிளான், தெல்லிப்பழை போன்ற இடங்களில் பொலிஸ், இராணுவம் ஆகியவற்றின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதைக் காண முடிவதாக கூறப்படுகிறது, இதுமட்டுமன்றி மேலும் சந்தேகத்திற்கிடமாக விளங்கும் இடங்களிலும் இந்த ரோந்து அதிகரிக்கப்பட்டுள்ளது.

# யாழ். நூலகநிதிக்கு வங்கி ரூ. 50,000 நிதிஉதவி

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நாஷனல் வங்கியின் யாழ்ப்பாணக் கிளையின் சார்பில், கிளை முகாமையாளர் திரு மு நவரத்தினராஜா, நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பொதுசன நூல் நிலைய நம்பிக்கை நிதிக்கு ரூபா 50,000 க்கான காசோலையை, யாழ்ப்பாண மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதனிடம் கையளித்தார்.

யாழ்ப்பாண மாநகர மண்டபத்திலுள்ள முதல்வரின் அலுவலகத்தில் வைத்து வங்கி முகாமையாளர் இக்காசோலையை கையளித்தார்.

கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும், பொலிஸ் நலன்புரிச் சங்கத் தலைவரும், பொலிஸ் இன்ஸ்பெக்டர்களின் சங்கத்தின் பதில் தலைவருமான திரு எஸ், சுரேந்திரன் தனது குடும்பத்தின் சார்பில் நூல்நிலைய நிதியாக 1000 ரூபாவை முதல்வரிடம் அன்பளித்தார்.

யாழ்ப்பாண மாநகர முதல்வர் கடந்த வாரம் கொழும்பில் யாழ்ப்பாண பொதுசன நூலகவாரத்தில் கலந்துகொள்ளச் சென்ற சமயம், திரு. சுரேந்திரன் 100புத்தகங்களும் அன்பளிப்புச் செய்திருந்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் ஹற்றன் நாஷனல் வங்கியின் யாழ்ப்பாண கிளை முகாமையாளருடன், வங்கி உத்தியோகத்தர் திரு எஸ். சூரியகுமார், வங்கியின் சட்ட ஆலோசகரும் வட பிராந்திய போக்குவரத்துச்சபை தருதிவாய்ந்த அதிகாரியுமான திரு. எஸ். கனகரத்தினம் மற்றும் முக்கிய பிரமுகர்களான தொழிலதிபர்கள் திரு. எஸ். மகேந்திரன், திரு. இராஜலிங்கம் மற்றும் யாழ்ப்பாண மாநகர உதவி முதல்வர் திரு. எஸ். அலோசியஸ், யாழ்ப்பாண மாநகர உறுப்பினர் ஜனாப் இமாம், மாநகர ஆணையாளர் எஸ். சிவஞானம் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர் (மா)

# இந்திரா அமெரிக்கா, ரஷ்யா செல்கிறார்!

புதுடில்லி, மே. 25

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி ஜூலை யாத இறுதிப்பகுதியில் அமெரிக்காவுக்கும் செப்டம்பரில் சோவியத் யூனியனுக்கும் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்கிறார்.

அமெரிக்காவில் திருமதி காந்தி அமெரிக்க ஜனாதிபதி திரு றொனல்ட் றீகனுடன் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே நீண்ட நாட்களாகத் தீர்க்கப்படாமலிருக்கும் பல பிரச்னைகள் குறித்து பேச்சு நடத்துவார்.

திரு றீகனின் அழைப்பின் பேரிலேயே திருமதி காந்தி அமெரிக்காவுக்குச் செல்கிறார்.

சோவியத் ஜனாதிபதி திரு லியோனிட் பிரஷ்னேவின் அழைப்பின்பேரில் சோவியத் செல்லும் திருமதி காந்தி சோவியத் அதிபருடனும் மற்றும் தலைவர்களுடனும்பேச்சுவார்த்தை நடத்துவார். [இ]

## ஒத்திவைப்பு

(மாவிட்டபுரம்)

தமிழகத்தின் பிரபல பாடகி எம். எல். வசந்தகுமாரியின் யாழ்ப்பாண விஜயம் பிற்போடப்பட்டுள்ளது.

### மணிவாக்கு

பலவீனர் அதிர்ஷ்டத்திலும் சோதிடத்திலும் நம்பிக்கை வைக்கின்றனர். பலமுடையவர்கள் காரண காரியத் தொடர்பிலேயே நம்பிக்கை வைக்கின்றனர்.

— எமர்சன்.

## நமது நோக்கு

# தண்ணீரே மன்னாரின் முதற் தேவை

"கௌரவ அமைச்சரே எங்கள் விடாயைத் தீருங்கள். நாங்கள் நாட்டின் பசியைப் போக்க உதவுவோம்"

மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைகளைக் கவனிக்கும்பொருட்டு அண்மையில் அங்கு சுற்றுப்பிரயாணம் செய்த காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் காமினி திசநாயக்காவுக்கு மன்னார் மக்கள் இந்த ஒரு வேண்டுகோளையே வெவ்வேறு இடங்களில் விடுத்தனர்.

நாட்டின் உணவுக்களஞ்சியங்களில் மன்னார் ஒன்ருக இருந்ததை பண்டைய சரித்திரம் பிரபலப்படுத்துகிறது

தேவாரகாலத்திலே சிறப்புற்றிருந்த திருக்கேதீஸ்வர ஆலயமும், மாதோட்ட நன்னகரின் சழனிகளின் விளைச்சலும் தோட்டச் செய்கையின் திறமையும் அங்கு ஒரு சிறந்த நாகரிகம் வளர்ச்சியடைந் திருந்ததை புலப்படுத்துகின்றன.

சரித்திர ஆராய்ச்சியின் முடிவுகள் முதல்முதலில் ஜனங்கள் பெருநதிக் கரைகளின் ஓரமாகக் குடியேறி இருக்கவேண்டுமெனக் கூறுகின்றன. உணவு உற்பத்திக்கு நீர் வளம் வேண்டுமென்பது அடிப்படை உண்மை.

இந்தியாவில் கங்கை, சிந்துநதிக் கரைகளிலும், மெஸொபொடேமியாவில் டைக்ரீஸ், யூபரடீஸ் கரைகளிலும், எகிப்து தேசத்தில் நீலநதிக்கரை ஓரத்திலும், சீனுவிலும் ஜனங்கள் ஆதியிற் குடியேறினர்களென்பது ஆராய்ச்சி.

"ஆறில்லா ஊர் பாழ்" என்ருல் மன்னார், யாழ்ப்பாணம் போன்று வானம் பார்த்த பிரதேசங்கள் மழை நீரைத் தேக்கி வைக்கும் குளங்களிலேயே தங்கியிருக்கின்றன.

ஆழமற்ற குளங்கள் நீண்ட வரட்சி காரணமாக வற்றிப்போக அவற்றைக் கவனிப்பார் அற்ற நிலையில் ஏழைக் கமக்காரர்கள் என்ன செய்யமுடியும்?

மகாவலி வருமென்று காத்திருப்பதா? எடுத்ததற்கெல்லாம் மகாவலித்திட்டமே சர்வரோக சஞ்சீவி என்ற மந்திரத்தை உச்சாடனம் பண்ணும் அமைச்சர்களும் அரசாங்க அதிகாரிகளும் 'ஐயர் வருமளவும் அமாவாசை காத்திருக்காது' என்ற உண்மையை உணராதவர்கள்.

தென்னிலங்கையின் சீதோஷ்ணம் வேறு; போதிய நீர்வசதியிருந்த போதும் நெல் விளைச்சலுக்குகந்த பூமி வடக்கு, வடமத்திய, கிழக்கு மாகாணங்களிலேதான் உண்டு.

ஆறில்லா நிலைமையில் இங்குள்ள குளங்களை சீரமைத்தல் மிக அவசரமானது. எதனைக்கேட்டாலும் "மொழி, இனப் பிரச்சினைகளை கைவிட்டு ஒற்றுமைப்பட்டு நாட்டின் அபிவிருத்தியில் ஒருமுகமாக உழைப்போம்" என்பதே காணி அமைச்சரின் கைதேர்ந்த போதனை போலிருக்கின்றது. ஆட்டுக்குள் மாட்டை விட அவசியமில்லை.

வடக்குத்தெற்கென்று பாராமல் எவ்வளவு பெரிய செலவென்ருலும் நீரைத் தருவிக்க குளங்களின் புனரமைப்பு அவசியமானது. அதனைப் பூர்த்திசெய்து மன்னார் விவசாயிகளின் அபிவிருத்தி வேலைக்கு வெற்றிகாண உதவுவதே அமைச்சரின் உடனடி உதவியாகும்.

# கொல்வினும் கருணையும்

சட்டத்துறையிலும், நாட்டின் பொதுநல சேவையிலும் சிறப்பாக அரசியலிலும் ஐம்பது ஆண்டு நிரம்பிய டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவுக்கு அளிக்கப்பட்டுவரும் உபசாரங்கள் பல. அவை சிறப்புற வேண்டுமென நாமும் வாழ்த்துகின்ருேம்.

1935 தொடக்கம் அண்மைக்காலம் வரைக்கும் டாக்டர் கொல்வின்ன் யாழ்ப்பாண முற்றவெளிப் பிரசங்கமென்ருல் ஆங்கிலம் தெரியாதவர்களும் மிகப்பரபரப்பு அடைவார்கள். தமிழ் மொழி பெயர்ப்பு அவசியமாகக் காணப்படாது; அவ்வித மொழிபெயர்ப்பு எவ்விடத்தில் சுவையற்றதென்பதையும் தெரிந்துகொள்ளும் விதத்தில் அவருடைய ஆங்கிலமும் அதற்கு பக்கவாத்தியமான உடம்பசைவும் செயற்படும்.

'ஹார்ட்போர்ட் பயில்வான் கொத்தலாவெல" என்ற பதங்களுடன் அவருடைய நீண்டு நெளியும் வசனமொன்று முடிவடைந்தபோது, உடம்பின் அசைவு சொற்பிரயோகத்தின் எதிரொலியாகச் செயற்பட்டு சபையைக் குதூகலித்தது மறக்கமுடியாத நிகழ்ச்சி.

சொல் வன்மையால் தமிழ் மக்களின் உள்ளங்களைப் பெரிதும் கவர்ந்திருந்த டாக்டர் கொல்வின் அவருடைய ஆப்த நண்பன் டாக்டர் என். எம்., கம்யூனிஸ்ட் கட்சி பிரமுகர் பீற்றர் கெனமன் போன்றவர்கள் இடதுசாரி அரசியல் போக்கை யாழ்ப்பாணத்தில் பரப்பிய பெரியார்கள்.

நீதித்துறையில் சட்டத்தை விளக்கி வாதாடும் திறமை கொல்வினுக்கு பெரும் புகழ் கொடுத்தது. அதனுல் அவருடைய அரசியல் வாழ்வு செழிப்படைந்தாலும், சில சமயங்களில் தேர்தலில் தோல்வியையும் ஏற்படுத்தியது; கடமைக்குக் கட்டுப்பட்டவரென்பதை அது புலப்படுத்துகிறது.

பொருமையல்ல, கருணையே தம்முடைய கட்சியின் இலட்சியத்துக்கு மூலவேர் என்று அவர் குறிப்பிட்டது எமது சிந்தனைக்குரியது.

செல்வர்களின் சிறப்பில் பொருமை கொண்டெழுந்தது இடதுசாரி அரசியல் என்று அமெரிக்க ஜனாதிபதி ரீகன் தானும் சொல்லத்துணியார், சோவியத் ரஷ்யாவின் ராணுவபலத்தைக்கண்டு விசனப்படும் அவர் இவ்வாறு கூறுவதும் விவேகமல்ல.

கருணையே குடியாட்சியின் அறம் என்பது பௌத்தம்; அதனையே லட்சியமாகக் கொண்டது லங்கா சமசமாஜக் கட்சியின் சித்தாந்தம்; இருப்பினும் ஐம்பது வருடங்களுக்குப் பின் ஒரு பௌத்தநாட்டில் இந்தக் கட்சி வளர்ச்சியடையாதிருப்பது சிந்தனைக்குரியது.

பௌத்தம் உலகெங்கும் பரவியதற்கு புத்தபிரானின் போதனைகளிலும் மேலானது அவருடைய, அவரின் சீடர்களினுடைய கருணை வாழ்வே!

அரசியல் சித்தாந்தம் நாட்டுமக்களின் சொந்த வாழ்விலிருந்து வடித்தெடுக்கப்பட்டதாயமைந்தால் அது அந்த விளைநிலத்திலே வேரூன்றும்.

சோஷலிசம் தொடங்க அது தழைக்க ஒரு நல்ல ஆத்மாவே தேவை என்கிருர் மகாத்மாகாந்தி.

பரந்த அரசியலமைப்பும் பிரசாரமும் தொண்டின் அத்திபாரத்தில் உருவெடுக்குமானுல் சோஷலிசம் மக்களைக்கவராமல் விடுவதற்கு நியாயமில்லை.

## இலங்கையின் அணிசேராகொள்கை:

# மாஸ்கோ மதிப்பளிக்கிறது

(மாஸ்கோ)

இலங்கை வெளிநாட்டு அமைச்சர் ஏ. சீ. எஸ் ஹமீத் தமது மாஸ்கோ விஜயம் சோவியத்-இலங்கை உறவுகளை மேலும் விருத்திசெய்ய உதவியுள்ளது என்று கூறினுர். இந்நம்பிக்கை பரஸ்பரம் பகிர்ந்துகொள்ளப்படும் நம்பிக்கையாகும்.'

இவ்வாறு எழுதுகிருர் பிரபல ஏ. பி. என். அரசியல் விமர்சகர் நிக்கோலாய் ஒபடோவ்.

வாஸ்தவம் சோவியத்-இலங்கை வெளிநாட்டுக் கொள்கையில் வித்தியாசம் உண்டு. இது குறிப்பிட்ட சரித்திர நடப்புகால காரணங்களால் ஏற்பட்டதாகும். ஆனுல் இதை இறுதியாக பகுப்பாய்வுசெய்யும்போது இது இரு நாடுகள் பற்றிய வெளிநாட்டுக் கொள்கையைப் பாதிக்கவில்லை என்று ஒபடோவ் எழுதுகிருர்.

சமாதானம், பதட்டத்தைக் களைந்தெறிவது ஏகாதிபத்தியம், கலோனியல் வாதம் முதலான பிரதான விஷயங்கள் குறித்து இரு நாடுகளும் ஒத்த கொள்கைகளைக் கடைப்பிடிக்கின்றன. இதை மாஸ்கோவில் நடந்தேறிய சோவியத்-இலங்கை பேச்சுவார்த்தைகள் ஊர்ஜிதம் செய்தன என்றும் வெளிநாட்டமைச்சர் ஹமீதின் விஜயத்தின் முடிவில் கைச்சாத்திடப்பட்ட கூட்டறிக்கை உலகசமாதானம் போன்ற விஷயங்களில் கருத்தொற்றுமைகொண்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினுர்.

சர்வதேசநிலவரம்சுளீணித்து வருவதையிட்டுக் கவலை தெரிவித்துள்ளதுடன், உலகை அச்சுறுத்தும்ஆயுத போட்டிபோராபாயம். பந்தோபஸ்தைப்பலப்படுத்துவது ஆகிய விஷயங்களிலும் இரு நாடுகளும் ஒரே கண்ணேட்டம் கொண்டுள்ளதையும் கூட்டறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

மாஸ்கோ விஜயத்தின் பலாபலன்கள் என்ன?

முதலாவதாக, இரு நாடுகளும் உறவுகளை அபிவிருத்தி செய்ய விரும்புகின்றன.

இரண்டாவதாக மாஸ்கோ பேச்சுவார்த்தைகள் உலக பதட்டத்தைக் குறைக்கும் போராட்டத்துக்கு பங்களிப்புச் செய்கின்றன.

சோவியத் யூனியனும் இலங்கையும் பரஸ்பரம் புரிந்து செயல்படுவது சோஷலிஸ நாடுகளும் அணிசேரா நாடுகளும் நெருங்கி செயல்படுவதற்குப் பங்களிக்கிறது. இலங்கையின் அணிசேராக் கொள்கையை மாஸ்கோ பெரிதும் மதிக்கிறது.

### 75-வது உலக சாரணர் ஆண்டு பூர்த்தி விழா!

# சாரணர் வாழ்க்கையின் தத்துவங்கள் என்ன?

எப்பொழுது ஒருவன் சாரணனைச் சேர்ந்துகொள்ளுகிருனே அப்பொழுதே அவன் சாரண இயக்கத்தில் சொல்லப்படும் சாரணிய விதிகளையும் கொள்கைகளையும் தான் ஒரு மனிதன் என்ற முறையில் பின்பற்றத் தொடங்குகிருன். எப்பொழுது மனிதன் தனக்குக் கடவுளால் கொடுக்கப்பட்ட பிரித்தறிவை பாவிக்கிருனே அப்பொழுதுதான் அவன் மனிதனுக வாழ முடியும். இல்லாவிடின் மனிதன் இரண்டுகால் மிருகங்களாகவே வாழ்ந்து மடிய நேரிடும். பேடன்பவல் அவர்கள் சாரணீய விதிகளில் முதலாவதாக கடவுளுக்கு தொண்டு செய்ய வேண்டும் எனக் கூறியுள்ளார். இதில் முக்கிய விஷயங்கள் அடங்கி இருக்கிறதை சாரணீய வாழ்க்கையில் நாம் கவனித்து நடக்கவேண்டும். எப்படி கடவுள் எங்களைப் படைத்து சுயநலம் இல்லாது எங்களுக்கு வேண்டியவற்றை கொடுத்து உதவிசெய்கிருரோ இவ்விதம் சாரணராகிய நாமும் கடவுளை மற்றவர்களிடத்தில் கண்டு நம்மால் செய்யக்கூடிய உதவிகளைச் செய்வதே எமது வாழ்க்கையின் முதல் கடமையாகும். சேவையிலேதான் நாம் கடவுளைக் காணமுடியும் என்று முன்பு வாழ்ந்து கண்ட பெரியோர்களும் தத்துவஞானிகளும் கூறியிருப்பதை சாரணராகிய நாம் கைக்கொள்ள வேண்டும்.

சாரணன் தன் நம்பிக்கையுடையவனுகவும் மனதிடமுள்ளவனுகவும் திரிகரண சுத்தியுள்ளவனுகவும் எந்நேரமும் சிரித்தமுகத்துடன், சுயநலமில்லாது மற்றவர்களுக்குத்தொண்டுசெய்வதில் ஆர்வமுடையவனுக இருத்தல்வேண்டும். இப்படிப்பட்ட சிறந்த பண்புகளை சாரணிய வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக் கொள்ள முடியும் என்று சொன்னல் மிகையாகாது. ஒரு சாரணன் தன்னுடைய



[7-ம் பக்கம் பார்க்க]

ம. வீ. த. கனகராஜா
(சின்னக்காரியதரிசியும் உதவி மாவட்ட ஆணையாளரும்
(நல்லூர்) யாழ். மாவட்ட கிளைச் சாரணர் சங்கம்)

(திருக்கேதீஸ்வரத்தில் இன்று கொடியேற்றம் - 1ந் திருவிழா)

# மாதினியாள் கௌரி மகிழும் மணிமார்பன்!

ராகம் – கல்யாணி தாளம் – ஆதி

**பல்லவி**

கேதீச்சரத்து நாதன் பதமலர் பணிமனமே!
சேதி யொன்று சொல்லுவேன் – தினமே (கேதீ...)

**அனுபல்லவி**

மாலயன் இந்திரன் யாவரும் காணு ஐயன்!
மாதினியாள் கௌரி மகிழும் மணிமார்பன்! (கேதீ...)

**சரணம்**

யாழ்முறி பாடிய சம்பந்தர் போற்றி செய்தார்!
நாவலூர் வன்தொண்டர் சுந்தரர் ஏத்தி நின்ருர்!!
ஆழிசூழ் ஈழத்தில் சைவத்தை வாழச் செய்த
யாழ்நகர் நாவலர் தேன்பொந்து என்று சொன்னுர்!
(கேதீச்...)

- எஸ். முருகையா

# "செல்லத்துரையின் பேனாமுனையின் வேகம் வடக்கில் பல இயக்கங்களை வளர்த்தது.

## யார், என்ன, எங்கு பேசுவார் என்பதைஊகிக்கும் திறமைமிக்கவர்''

(சரவெட்டி)

''பதவியில் உள்ளவர்கள் பட்டத்தில் உள்ளவர்கள் எங்கு எதைச் சொன்னாலும் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்துவிடுகின்றன. என்ன கருத்தைச் சொன்னார் என்பதை விட, யார் சொன்னார் என்பதில்தான் பத்திரிகைகளின் கவனம் ஒரு காலத்தில் இருந்தது. ஆனால் யார் சொன்னார் என்பதற்கு மட்டுமல்ல, என்ன சொன்னார் என்பதற்கும் இடம் கிடைக்கத்தக்க வகையில் அறிவுள்ளவர்களது கருத்துக்கும் முக்கியத்துவம் கொடுத்த ஒரு எழுத்தாளன் அமரர் செல்லத்துரை.''

இவ்வாறு அச்சுவேலி மகா வித்தியாலயத்தில் நடந்த பத்திரிகை எழுத்தாளர் அமரர் செல்லத்துரையின் ஞாபகார்த்த அஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் தெரிவித்தார்.

இலங்கை கலை இலக்கிய நண்பர்கள் ஒன்றியம் இலங்கை பத்திரிகை எழுத்தாளர் இயக்கம் இலங்கை மகளிர் அவை ஆகியன இணைந்து நடத்திய மேற்படி அஞ்சலிக் கூட்டத்திற் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமை தாங்கினார். திரு ஐயா. சச்சிதானந்தம் அறிமுகநிகழ்வுரை நிகழ்த்தினார்.

திரு. இராசலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''அமரர் செல்லத்துரையின் எழுத்தாற்றலை வடக்கில் உள்ள எந்த அரசியல் கட்சிகளும் சரி எந்த இயக்கங்களும் சரி பாராட்டாமல் இருக்க முடியாது. அவரது பேனா முனையின் வேகத்தாலும், சிந்தனை ஓட்டத்தாலும் மக்கள் மத்தியில் வளர்ந்தவர்கள் பலர் உண்டு. இதுமட்டுமல்ல அவரின் ஆற்றலாலும் திறமையாலும் அவர் சார்ந்திருந்த பத்திரிகை வடக்கில் வேகமாக பிரபல்யமடைந்தது என்று சொல்லவும் முடியும். இன ஒற்றுமைக்கும், சமூக விடுதலைக்கும் அவர் பல கோணங்களில் தனது எழுத்தாற்றலின்மூலம் வழிவகுத்தவர். அவர் தனது வறுமையான வாழ்விலும்கூட செம்மையாக பண்புடன் வாழ்ந்தவர் என்றூர்.

### பருத்தித்துறை எம். பி. கருத்து

பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் பேசுகையில் கூறியதாவது:

''எந்தக் காலகட்டத்தில் எப்படி எப்படி மக்களைத் திசைதிருப்பவேண்டுமோ அப்படி தனது எழுத்தாற்றலால் மக்களை வழிநடத்திய திறமை, பெருமை அமரர் செல்லத்துரைக்குண்டு அவரது ஆற்றலால் பயன்பட்டவர்களும் சரி. பயன்படாதவர்களும் சரி அவரின் திறமையை பாராட்டாமல் இருக்க மாட்டார்கள். ஆனால் பத்திரிகா தர்மத்திலிருந்து நழுவாமலும் நடந்து எல்லாருக்கும் நல்லவராகவும் வாழ்ந்தவர் இவர்.

''எந்த இடத்தில் யார் பேசுகிறார் என்றால் அந்த இடத்தில் அவர் என்ன பேசியிருப்பார் என்று செல்லத்துரையால் உணரமுடியும், எல்லாரும் எல்லாவற்றையும் செய்ய முடியாது.'' எவரது போக்கு எப்படி எந்தக் கோணத்தில் எவர் பேசுகின்றார் என்பதை உணர்ந்து அவரவர் போக்கிற்கேற்ப கருத்து வழுவாது எழுதும் ஆற்றல் இவருக்கு நிறைய இருந்தது. உதாரணமாக துரைரத்தினம் எம். பி. நீர்வேலிக் கூட்டத்தில் பேசுகின்றார் என்று தெரிந்திருந்தால் நிச்சயமாக அவர் நீர்வேலி வாழைச்குலை, அச்சுவேலி வெங்காயம் போன்றவற்றின் உற்பத்தி பற்றி பேசுவார் என்று செல்லத்துரைக்கு நன்றாகத் தெரியும். இதனால் இவர் ஒவ்வொருவரது பேச்சுக்களையும் சிறப்பாக எழுதும் ஆற்றல் மிக்கவராகத் திகழ்ந்தார்'' என்றார்.

### அபிவிருத்தி சபைத் தலைவர் பேச்சு

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. சு. நடராசா பேசுகையில் கூறியதாவது அமரர் செல்லத்துரை தனது எழுத்தாற்றல் மூலம் தமிழரசு இயக்கத்திற்கும், இதன்பின் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் சிறந்த பணியாற்றியவர். அவர் எமது இயக்க ஆதரவாளனாக இருந்தாலும், தான் ஒரு பத்திரிகையாளன் என்ற அந்தஸ்தை விட்டு வழுவாது எங்கள் இயக்கத்தின் வளர்ச்சிக்கு தனது எழுத்தாற்றல்மூலம் உதவியவர். இவர் ஆங்கில அறிவில் பாண்டித்தியமடைந்திருந்தால் அவர் இன்று உலக பத்திரிகையாளர்களாலும், உலக அரசியல் தலைவர்களாலும் பாராட்டப்பட்டிருப்பார். உலக பத்திரிகையாளர்கள் மகாநாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பும் இவருக்கு ஏற்பட்டிருக்கும் என்றார்.

### ஸ்ரீ காந்தா கருத்து

தமிழர் சுயாட்சிக் கழகத்தின் சார்பில் சட்டத்தரணி திரு. ந. ஸ்ரீகாந்தா பேசுகையில் கூறியதாவது அமரர் செல்லத்துரை ஒரு கட்சி சார்பானவராக இருந்தாலும், மாற்றுக் கட்சிக்காரரின் எதிர்ப்பைத் தேடாதவர். பத்திரிகைத் தொழில் ஒரு புனிதமானது என்பதை அவர் உணர்ந்து நடந்துவந்தவர். பத்திரிகை நிருபர்கள் போர்முனைகளையும் நேரில் சந்திக்க வேண்டியவர்கள். இரும்புத் திரையையும் உடைத்து செய்தியை எடுக்க வேண்டியவர்கள். எமது நாட்டின் நிருபர்களைப் பொறுத்த மட்டில் அமரர் செல்லத்துரையும் பல போர்முனைகளுக்குள் நுழைந்தவர், எடுக்கமுடியாத செய்திகளையும் எடுக்கும் ஆற்றல் அவரிடம் இருந்தது. 1977 தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்கை முற்றாக தம் வசமாக்குவதற்கு செல்லத்துரையின் பேனா முனையும் ஒரு சிறந்த ஆயுதமாகப் பயன்பட்டது. இதனால் இந்த இயக்கமும், அதைப் பயன்படுத்துபவர்களும் அன்னாருக்கு மிகவும் கடமைப்பட்டவர்கள் என்று கூறாமல் இருக்க முடியாது சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் உடுப்பிட்டியில் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரியப்பட வாய்ப்பு ஏற்பட்டதென்றால் அது அமரர் செல்லத்துரையின் எழுத்தாற்றலும், அவரது விடாமுயற்சியுமென்று தான் கூறவேண்டும். சமூகக் குறைபாட்டு நடவடிக்கைகளிலும் பலரை கண்விழிக்கச் செய்த பெருமை அமரர் செல்லத்துரைக்கு உரியது. இவற்றை நோக்குமிடத்து அவர் தான் சார்ந்திருந்த இயக்கத்திற்கும் சமூகத்திற்கும், தன்னாலான பெரும் பங்குகளைச் செய்தவர்'' என்றார்.

### சபை உறுப்பினர் கருத்து

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. க. சின்னத்துரை பேசுகையில், ஆரம்பத்தில் ஈ.வே.ரா பெரியார் திராவிடக் கழகத்தின் உறுப்பினராக இருந்த அமரர் செல்லதுரை 1946 ல் அமைச்சராக திரு. சு. நடேசபிள்ளை அச்சுவேலிக்கு வந்தபோது எதிர்ப்புக்காட்டியவர்களில் இவரும் ஒருவர். 1952ல் தமிழரசு வாலிப முன்னணி ஆரம்பித்த போது அதில் முக்கிய உறுப்பினராக இருந்தவர், பத்திரிகை எழுத்தாளராக இருந்ததால் அவர் தன்னை வெளிக்காட்டி நடக்கவில்லை. ஆனால் இயக்கத்தின் வளர்ச்சிக்கு தனது முழு ஆதரவையும் தந்தவர்'' என்றார்.

### எழுதுவினைஞர் சங்கத் தலைவர்

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் யாழ். கிளைத் தலைவர் திரு. செ. மெற்றாஸ்மயில் பேசுகையில் ''தொழிற் சங்கங்களின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் அமரர் செல்லத்துரை கைகொடுத்துதவியவர், தொழிற்சங்க கூட்டணி ஒற்றுமைக்கு வித்திட்டவர்'' என்றார்.

### பத்திரிகை எழுத்தாளர் இயக்கத் தலைவர்

இலங்கைப் பத்திரிகைஎழுத்தாளர் இயக்கத் தலைவர் திரு. ஏ. என். எஸ். திருச்செல்வம் உரையாற்றுகையில் ''அமரர் செல்லத்துரை தமிழ் பத்திரிகைத் துறையில் தனித்துவம் வாய்ந்தவராகவும், ஏனைய பத்திரிகையாளர்களுக்கு ஒருமுன்னோடியாகவும் திகழ்ந்தவர். இலங்கைப் பத்திரிகை எழுத்தாளர் இயக்கச் செயற்குழு உறுப்பினராகவிருந்து இயக்கத்தின் செயற்பாட்டிற்கு உறுதுணையாக இருந்தார்'' என்றார்.

முன்னாள் உடுப்பிட்டி எம. பி, திரு. கே. ஜெயக்கொடி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. அ. வைத்திலிங்கம், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மாவோ) ஜனாப். எம். ஏ. சி, இக்பால், சட்டத்தரணிகளான எஸ். சிவகுருநாதன், ஆர். பாலசுப்பிரமணியம், வி. ரி. இளங்கோவன் உட்பட இன்னும் பலர் உரையாற்றினார்கள்.

இலங்கைப் பத்திரிகை எழுத்தாளர் இயக்கப் பொதுச்செயலாளர் திரு. எஸ். சி. எஸ். சிதம்பரநாதன் நன்றியுரை கூறினார்.

(வண்-நிருபர்)

# சுவாமி ஜெகதீஸ்வரானந்தா வெளிநாடு விஜயம்

[கொழும்பு]

சுவாமி ஜெகதீஸ்வரானந்தாவின் வெளிநாட்டு விஜயத்தை முன்னிட்டு நேற்று மாலை இராமகிருஷ்ண மிஷன் இறு மண்டபத்தில் கூட்டுப் பிரார்த்தனையும், சுவாமி ஜெகதீஸ்வரானந்தாவின் அருள் உரையும் நடைபெற்றது.

திருகோணமலை ''சிவயோக சமாச'' சுவாமி கெங்காதரானந்தா கண்காணிப்பில் 12 ஆண்டுகள் சாதனைமேற்கொண்ட பிரமச்சாரி சுவாமி ஜெகதீஸ்வரானந்தா, அன்பர்களின் அழைப்பின் பேரில் வெளிநாடுகளில் ஆன்மீக சேவையாற்றச் செல்வதை முன்னிட்டு, சிவயோக சமாச அன்பர்களால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந் நிகழ்ச்சியில் பலரும் கலந்து கொண்டனர்.

## கரவெட்டி மக்கள்

# சகல விடயங்களிலும் முன்னோடிகள்

## அரச அதிபர் பாராட்டுகிறார்

(சரவெட்டி)

''யாழ். மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் கரவெட்டிப்பகுதி மக்கள் சகல துறைகளிலும் முன்னோடியாக விளங்குகின்றார்கள். இதனையிட்டு நான் அவர்களைப் பாராட்ட விரும்புகின்றேன்''.

இவ்வாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா மாலி சந்தியிலுள்ள மாடிக்கட்டிடத்தில் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக் காரியாலயத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரை தலைமையில் நடைபெற்றது.

உடுப்பிட்டி எம்.பி. திரு. த. இராசலிங்கம் இங்கு பேசுகையில் கூறியதாவது:-

''நான் எம். பியாகப் பதவி ஏற்ற நாள்முதல் இப் பகுதி உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்திற்கென நிரந்தரமான கட்டிடம் ஒன்றை நிறுவுவதற்கு வேண்டிய நடவடிக்கையை மேற்கொண்டு வந்தேன். இதற்கு முதற்கட்டமாக காணி ஒன்றைச் சுவீகரிப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. மாவட்ட இணைப்புக் கூட்டத்திலும் இது சம்பந்தமாகப் பிரேரணைகளை முன்வைத்தேன். அப்போது அரசாங்க அதிபராகவிருந்த திரு. லால் விஜயபாலா எனது பிரேரணைகளை ஏற்றாரே தவிர என்ன செய்தார் என்பது எனக்குத் தெரியாது. இதனால் காணி சுவீகரிப்பு வேலைகளும் தடைபட்டே வந்தன.

'எனவேகாணி சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகளை எமது அரசாங்க அதிபர் மேற்கொண்டால் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து பணம் ஒதுக்கி விரைவிலேயே நிரந்தரமான கட்டிடம் ஒன்றை நிறுவித் தருவேன்'' என்றார்.

மேலதிக அரசாங்க அதிபர் திரு. தர்மபாலனும் பேசினார். திறப்புவிழாவில் கிராமிய அபிவிருத்திக்கென வழங்கப்பட்ட 10,000 ரூபா நிதியில் இருந்து வழங்கப்பட்ட கிருமிநாசினி தெளிகருவிகளை கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு வழங்கும் வைபவமும் இடம் பெற்றது.

---

## கே. பி. எஸ். மேனன் நூல்

மாஸ்கோ, மே. 25

''சோவியத் யூனியனைப் பற்றி இந்திய ராஜிபவாதி'' என்னும் நூலின் ரஷ்ய மொழி பெயர்ப்பு இங்கு வெளியாகியுள்ளது. மாஸ்கோ முன்னேற்றப் பதிப்பகம் இதனை வெளியிட்டுள்ளது. சோவியத் யூனியனில் இந்தியத் தூதராகப் பணியாற்றிய கே பி. எஸ். மேனன் இந்நூலின் ஆசிரியர்.

இந்நூலைப் பற்றி சோவியத் அமைச்சர் நிக்கொலாய் கோல்தின், ஸஇஸ் வெஸ்தியாவில் ஒரு மதிப்புரை எழுதியுள்ளார்.

[இ]

# மினிபஸ் உரிமையாளர், சாரதியிடமிருந்து ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடு கோரி மனு!

(மாவிட்டபுரம்

தமது மகனது மரணத்திற்கு காரணமாக இருந்த மினிபஸ்ஸின் உரிமையாளரிடமிருந்தும், சாரதியிடமிருந்தும் ஒரு லட்ச ரூபா நஷ்டஈடு கோரி இறந்தவரின் தாயார் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

கொல்லங்கலட்டியைச் சேர்ந்த பூதப்பிள்ளை கனகநாயகம் என்பவரை யாழ். ஸ்ரான்லி வீதியில் மினிபஸ்ஸால் மோதி மரணத்தை ஏற்படுத்தியது தொடர்பாக மினி பஸ்ஸின் உரிமையாளரான கண்டியைச் சேர்ந்த ரி.ஏ.டி. ரணசிங்கா மினிபஸ் சாரதியான சுன்னாகத்தைச் சேர்ந்த செல்லத்துரை இராசேந்திரம் ஆகியோரிடமிருந்து ஒரு லட்ச ரூபா நஷ்டஈடு கோரி இறந்தவரின் தாயாரான பூதப்பிள்ளை கதிராசிப்பிள்ளை யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

இவரது சார்பில் சட்டத்தரணி வி. எஸ். கணேசலிங்கம் இம்மனுவைத் தாக்கல் செய்ததையடுத்து நீதிபதி திரு எஸ் ஆனந்தக்குமாரசாமி சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்தல் அனுப்ப உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார்.

## பொலிஸ் இடமாற்றங்கள்

(மன்னார்)

மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு எஸ். குணவர்த்தன வவனியா பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரியாகவும், யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. சி. யோககுமார் மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். வவனியாபொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய திரு. பியசேனபெரேரா அனுராதபுரம் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

# பிரசவத் தாய்மாரும் பெண் நோயாளரும் ஒரே வார்ட்டில்!

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையில் பெண்கள் வார்ட்டில் பலத்த இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதால் நோயாளர்கள் விறாந்தை ஓரங்களில் தங்கியிருக்கவேண்டிய அவல நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலையில் ஒரே ஒரு பெண்கள் வார்ட் மட்டுமே இருப்பதால் பிரசவ தாய்மார்களும் சாதாரண பெண் நோயாளர்களும் இதே வார்ட்டிலேயே தங்க அனுமதிக்கப்படுகின்றனர். இதனால் பலத்த இடநெருக்கடி இங்கு ஏற்பட்டுள்ளது. பிரவசத் தாய்மார்களுக்கு இடம் கொடுக்கப்படுவதற்காக மற்ற பெண் நோயாளர்களை வார்ட்டிலிருந்து வெளியேற்ற வேண்டிய நிலைக்கும் வைத்தியசாலை நிர்வாகம் ஆளாக வேண்டிய நிலைமை ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் சகல நோயாளர்களும் ஒரே வார்ட்டில் அனுமதிக்கப்படுவதால் புதிதாக பிறந்த குழந்தைகளுக்கு மற்றைய நோயாளர்களின் நோயும் இலகுவாக தொற்றிக்கொள்ளக்கூடிய அபாய நிலையும் ஏற்படலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

இந்த வைத்தியசாலையில்

(7ம் பக்கம் பார்க்க)

# இன்றைய பலன்

வைகாசி மாதம் 12ம் திகதி

புதன்கிழமை

(26—5—82)

மேடம்; சகோதரபாசம்தலை தூக்கி நிற்கும் கைத்தொழில் விருத்திக்கும் இடமுண்டு முதியவர் ஒருவரின் அறிவுரைகள் முன்னேற்றத்தை அளிக்கும்.

இடபம்: சிந்தனைகளின் தாக்குதல் உங்கள் உடல் நிலையைப் பாதிக்கும். மனதில் அமைதி குன்றும். திடீர் முடிவுகளைத் தவிர்த்துக் கொள்ளவும். தொல்லைகளுக்கு இடமுண்டு.

மிதுனம்: குமுறும் நெஞ்சுடன் நாளைக் கடத்துவீர்கள். சிறுவிடயத்திற்கும் கூட மற்றவர்கள் குறைகூறுவார்கள். வாதரோகத்திற்கு இடமளியாது சுகாதாரம் வேண்டும்.

கடகம்: ஆராய்ச்சியாளர்களுக்குப் பொன்னான தினம். அறிவுத்தாகம் மேலிடும். இலபத்துக் கொண்டாட்டங்களும் இடம்பெறும் புதிய வாகனமொன்று கொள்வனவு செய்யலாம்.

**சிங்கம்:** சிந்தனைக்கணை தாக்கும். கடந்தகால எண்ணங்கள் அலைமோதும். சகோதரவழியால் சஞ்சலப்படக்கூடிய செய்திக்கும் இடமுண்டு.

கன்னி: மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம். கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு. தாய்வழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும்.

துலாம்: இதயத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும். இனசனம் கூடுவர். புத்திரசுகத்துடன் தொழில்துறையிலும் வெற்றிக்கு இடமுண்டு.

விருட்சிகம்: அரசாங்கச் செய்தியொன்று துயரத்தில் ஆழ்த்தும். பிணிக்கு இடம் கொடாது உடல் நலத்தைப் பேணவும். துக்கமான தினம்.

தனு: அன்பின் அணைப்பு உங்களை பரவசத்தில் ஆழ்த்தும். களஸ்திர வழியால் கனிவான சம்பவங்கள் இடம் பெறும். நன்மையான மாற்றங்கள் உண்டு.

மகரம்: வெளிவிடத்தொடர்புகளில் மந்தநிலை காணப்படும். தொழில் சம்பந்தமான கவலை அதிகரிக்கலாம். உடல் நலம் பாதிக்கப்படலாம். சுகாதாரம் வேண்டும்.

கும்பம்: புண்ணிய காரியங்களில் புதிய உற்சாகம் பிறக்கும். ஏழைகளுக்கு இரங்குவதில் முன்நிற்பீர்கள். தெய்வ குணத்திற்கும் இடமுண்டு. நல்லநாள்.

மீனம்: மனைவாழ்வில் மகிழ்ச்சிகரமான திருப்பம் ஏற்படும். குழந்தைகளின் முன்னேற்றம் திருப்தியை அளிக்கும். புதுமனை கட்டுவதற்கு சிலர் ஆலோசிக்கலாம்.

சோதிடக்கலாநிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை

## சம்பத்திரிசியார் பரிசளிப்புவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியின் பரிசளிப்பு விழா 29ந் திகதி சனிக்கிழமை மாலை நடைபெறவிருக்கின்றது.

இப்பரிசளிப்பு விழாவில் கலாச்சார அலுவல்கள் அமைச்சர் திரு. ஈ. எல். பி. ஹுருள்ளே பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். திருமதி ஹுருள்ளே பரிசில்களை வழங்குவார்.

## பொது நூல்நிலையக் கட்டடம்

யாழ். அபிவிருத்திச் சபை அனலைதீவு உப அலுவலகப் பொதுசன நூல்நிலையத்திற்கான புதிய கட்டட வேலைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஊர்காவற்றுறைப் பாராளுமன்ற உறுப்பினரால் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து இந்நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. நூல்நிலையம் இல்லாத குறையைத் தீர்க்கும்வண்ணம் போதிய இடவசதியுடனும், அழகாகவும் மத்திய சனசமூக நிலையத்தின் உதவியுடன் இந்நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. மிக விரைவில் இதன் திறப்புவிழா நடைபெறவுள்ளதாக இவ்வலுவலக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

## வித்தியாலய விளையாட்டு மைதானம்

அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயத்திற்கு இதுவரை காலமும் விளையாட்டு மைதானமோ, விவசாயத்திற்கான நிலமோ இல்லாமலிருந்தது. இதேசமயம் 1962ம் ஆண்டு சவீகரிக்கப்பட்டு 20 வருட காலமாக ஆட்சிப்படுத்தமுடியாதிருந்த பாடசாலையின் மேற்குப் புறமாக இருந்த சுமார் இருபது பரப்புக் காணி சென்ற வாரம் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபரால் மீண்டும் ஆட்சிப்படுத்தப்பட்டு, பாடசாலைக்குப் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது; ஊர்ப் பொதுமக்களும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும் சிரமதானம் மூலமாக இக்காணியின் எல்லை வேலியை அமைத்துள்ளனர். இதன் மூலம் நீண்ட காலமாக இழுபறியில் இருந்த காணி மீளப் பெறப்பட்டிருப்பதுடன் பாடசாலைக்கு நிரந்தரமாக வசதியுள்ள மைதானமும் கிடைக்கப்பெற்றுள்ளது.

[கி]

## அனலைதீவு செய்திகள்

## ஆலயத்திற்கு ஒலிபெருக்கி

அனலைதீவு ஐயனார் ஆலயத்தின் பாவனைக்காக ஒலிபெருக்கிச் சாதனங்களை அனலைதீவை சேர்ந்தவரும், தற்பொழுது மேற்கு ஜெர்மனியில் தொழில் பார்ப்பவருமான திரு ந சுதர்சன் ரூபா 15 ஆயிரம் செலவில் நன்கொடையாக வழங்கியுள்ளார். இதேபோல அனலைதீவுப் பிள்ளையார் ஆலயத்திற்குப் பாவனைக்காக ஒலிபெருக்கிச் சாதனங்களை இவ்வூரைச் சேர்ந்தவரும் தற்சமயம் மலேயாவில் வசிப்பவருமான திரு. மயில்வாகனம் வழங்கியுள்ளார். இவ்விரு ஆலயங்களிலும் இச்சாதனங்கள் இருப்பதால் சமயச் சொற்பொழிவுகள், கூட்டு பாட்டு நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு வாய்ப்பாகவுள்ளது.

## மீண்டும் ஆசிரிய சேவையில்

கடந்த 30 ஆண்டுகள் ஆசிரிய சேவை முடித்துச் சென்ற வருடம் ஓய்வுபெற்றவரான திரு. க. இளையதம்பி, அனலைதீவில் நிலவும் ஆசிரியர் பற்றுக்குறை காரணமாக மீண்டும் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளார் இவர் இறுதியாக அதிபராகக் கடமையாற்றிய வடலூர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலேயே இப்புதிய நியமனம் நடைபெற்றுள்ளது. இவர் மீண்டும் சேவையின் சேர்த்துக்கொள்ளப்படவேண்டுமெனப் பெற்றோர்களும், பொதுமக்களும் கூட்டாக ஊர்காவற்றுறைப் பாராளுமன்ற உறுப்பினர் ஊடாகக் கல்வியமைச்சரைக் வேண்டிக்கொண்டதற்கிணங்கவே இவ்வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ், சமயம், கணிதம் போன்ற பாடங்களைக் கற்பிப்பதில் திறமை மிக்க இவருக்கு மீளச் சேவையாற்றும் வாய்ப்புக் கிட்டியது அனலைதீவு மாணவர்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாகும்.

## பதவி உயர்வு

[மாவிட்டபுரம்]

வலி. வடக்கு கிராம அபிவிருத்தி அதிகாரியாக கடந்த பத்து ஆண்டுகளாக கடமையாற்றிய திரு. க சிவரத்தினம் மாவட்ட கிராம அபிவிருத்தி அதிகாரியாக பதவி உயர்வு பெற்று மன்னார் மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

## அச்சுவேலி ...

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

அரச தரப்பில் அரச சட்டத்தரணி கே. ஸ்ரீஸ்கந்தராசா ஆஜரானார்.

இதனைத் தொடர்ந்த நீதிபதி பிணைக்காரர்களை விடுதலை செய்தார்.

7500 ரூபா பிணையில் சென்ற 3-ம் எதிரி நீதிமன்றத்திற்கு வந்திருந்தார்.

புதிய குற்றப்பத்திரிகையின் கீழ் 3-ம் எதிரியின் சமூகத்திலும், 1-ம், 2-ம் எதிரிகளினதும் புதிதாக சேர்க்கப்பட்டவே, சவுந்தரராஜா சமூகமளிக்காத நிலையில் விசாரணை செப்டம்பர் 6-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

(அ-க)


மங்களகரமான அதிர்ஷ்டம் பார்க்கும் தினம்! இன்று 26-05-82 புதன்கிழமை மாலை 3மணி!!

# நஷனல் - சொனி - NATIONAL - SONY



தொலைக்காட்சிப் பெட்டிகளை 1-3-82க்கும் 15-5-82க்கும் இடையில் எமது ஸ்தாபனத்தில் கொள்வனவு செய்தோரில் அதிர்ஷ்டசாலிகளை தேர்ந்தெடுக்கும் பரிசுக் குலுக்கல் தகுதிவாய்ந்த நடுவர்கள் முன்னிலையில் இன்று 26-5-82 மாலை 3மணிக்கும் 4 மணிக்கும் இடையில் நடைபெறவுள்ளது.

★ 1ம் பரிசு NATIONAL தொலைக்காட்சிப் பெட்டி

★ 2ம் பரிசு ASIA சைக்கிள்

★ 3ம் பரிசு NATIONAL றைஸ் குக்கர்

ஆகிய பெறுமதிமிக்கபரிசுகளை வென்றெடுக்கும் அதிர்ஷ்டசாலிகள் நீங்களாஎன்பதை அறிந்து கொள்ளவும் - விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்கவும் இன்று உங்களை அழைக்கின்றோம்.

# சி. சின்னத்துரை அன் பிரதர்

39, K.K.S. வீதி, தொலைபேசி: 283 - 284 தந்தி: கல்கி யாழ்ப்பாணம்.

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 5 காட்சிகள்
THREE MUSKETEERS
28-5-82 முதல்
**லொறி ட்ரைவர் ராஜாக்கண்ணு**

**லிடோ** தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
எம் ஜி ஆர்-சரோஜாதேவி
**பெற்ருல்தான் பிள்ளையா**
(புத்தம்புதிய பிரதி)

**ராணி** (யாழ். நகர்)
Daily 5 shows
Today only
Clint Eastwood in
**BRONCO BILLY**

**வெஸ்லி** (மானிப்பாய்) 3-6-82 வரை
தினசரி 6-15, 9-15, சனி, ஞாயிறு 2-30
கமல் - ஸ்ரீபிரியா - நம்பியார்
**நீயா?**
[இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி]
(கலர்)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீபிரியா நடித்த
**பொல்லாதவன்**
(ஈஸ்ட்மன் கலர்)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
2-வது மாதமாக (சில தினங்கள் மட்டும்)
ஸ்ரீ பிரியா, சுபாசினி, கமல், ரஜனி, நாகேஷ்
இன்னும் பல நட்சத்திரங்கள் நடித்த
**நட்சத்திரம்**
(ஈஸ்ட்மன் கலர்)

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
வெற்றி முரசுகொட்டும்
3-வது வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
மாதர்கள் கூட்டம் அலைமோதுகிறது!
கார்த்திக் ராதா
தியாகராஜன் நடித்த
**அலைகள் ஓய்வதில்லை**
(கலர்)

ஹவுஸ் புல்... ஹவுஸ் புல்... ஹவுஸ் புல்...
**சாந்தி** (யாழ்நகர்) 10-30, 2-30, 6-15, 9-45
வெற்றிப்படம் 'குரு' தயாரிப்பாளர்களின்
மற்றுமோர் வெற்றிப்படைப்பு!
தென்னகத்தில் மிகுந்த பரபரப்பூட்டி காட்சியளித்த விறுவிறுப்பு மிகு வண்ணத்திரையோவியம்



கமல் (இருவேடங்கள்)
சுஜாதா, சுமன்,
தேங்காய், நாகேஷ்.
**கடல் மீன்கள்**
தவிர்க்கமுடியாத காரணங்களால் காட்சிகள் முன்கூட்டியே ஆரம்பிக்கப்படுவதால் ஆசனங்கட்கு முந்துங்கள்

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-15, இரவு 9-30



பல படங்கள் போட்டிக்கு வந்தும் தொடர்ந்து வசூலில் சாதனை. பலர் டிக்கட் இன்றித் திரும்புகின்றனர். இப்படத்திற்கு மாதர் கூட்டம் அலைமோதுவதால் உங்கள் டிக்கட்டுக்கு முந்துங்கள்.

ஸ்ரைல் நடிகர் ✶ ரஜனிகாந் ✶ விஜயன் ✶ கராத்தே மணி ✶ சுஜாதா ✶ ரதி
**அன்புக்கு நான் அடிமை**
[ஈஸ்மன் கலர்]


## யாருடையது?

யாழ்ப்பாணம் றீகல் படமாளிகையில் தவற விடப்பட்ட சிறு தொகைப் பணம் கொண்ட மணிபேர்ஸ் ஒன்று 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

## சாரணர்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறந்த வாழ்க்கையினுலும் பண்பாட்டினுலும் மற்றவர்கள் இவர்களைப் பார்த்து சாரணீய வாழ்க்கையில் ஏதோ நல்ல விஷயங்கள் அடங்கி இருப்பதை அறியக்கூடியதாக இருக்கும். இவர்கள் தாம் பெறும் இன்பத்தை மற்றவர்களுடன் சேர்ந்து அனுபவிக்கும் சிறந்த பண்புள்ளவராக இருப்பார்கள்.

சாரணுக சேரவிரும்பும் ஒருவன் சாரணீயத் தலைவனுடன் சாரணீய வாழ்க்கையின் உண்மையான விதிகளையும் தத்துவங்களையும் அறிந்துகொண்டபின்பேதான் இவ்வியக்கத்தில் சேர்ந்துகொள்ள வேண்டும். சாரணீய வாழ்க்கைத் தத்துவங்களை மனதில் ஒரு பாடமாக வரைந்துகொள்ளவேண்டும். இத் தத்துவங்களை சரியான முறையில் அறிந்துகொள்ளாவிடின் சாரணுக சேர்ந்துகொள்வதில் ஒரு பிரயோசனமும் இல்லாது போய்விடும்.

இவ்வியக்கத்தின் ஸ்தாபகர் பேடன் பவல், "சாரணீயம் என்பது திறந்தவெளி சகோதரத்துவமும்சேவையுமாகும்" என்று குறிப்பிட்டு இருக்கிருர்கள். இவ்வாக்கியத்தில் பெரிய உண்மைத் தத்துவங்கள் இருப்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். நாம் எல்லோரும் உலகு எங்கும் வியாபித்து இருக்கும் ஒரேஒரு கடவுளின் பிரதியின் பங்கே அல்லாது வேறு ஒன்றும் இல்லை என்ற வேதவாக்கியத்தின் உண்மைப்பொருளை அறிந்த பின்புதான் இச் சாரணீயஇயக்கம் தொடங்கப்பட்டுள்ளது என்பது எனது 50 வருட சாரணீய வாழ்க்கையிலிருந்து பெற்ற அனுபவமாகும். ஆகவே ஒருவனை பூரண மனிதனுக்கி தனக்கும் தனது சமூகத்திற்கும் சிறந்தவனுக வாழ்வாங்கு வாழ வழிகாட்டியாக அமைந்துள்ளது. மானிடப் பிறவியின் நோக்கத்தை நாம் சாரணீய வாழ்க்கையின்மூலம் அடையமுடியும் என்பது எனது அபிப்பிராயமாகும்.

உலக சாரணீயத்தின் 75வது ஆண்டு பூர்த்திவிழா இவ்வாண்டு உலகெங்கும் கொண்டாடப்படுகின்றன. இலங்கையிலும் எல்லா மாவட்டங்களிலும் மிகச்சிறப்பானமுறையில் கொண்டாடப்படுகின்றன. யாழ் மாவட்ட கிளைச் சங்கம் இம்மாதம் 7ம் திகதி தொடக்கம் 29ம் திகதிவரையில் பொருட்காட்சி ஒன்றினை நடாத்தஉத்தேசித்துஉள்ளது. இச் சாரணீய வாழ்க்கையில் ஈடுபாடு உள்ளவர்கள் அனைவரையும் இதில் பங்குபற்றுமாறு தயவாக கேட்டுக்கொள்ளுகிறேன்.


25 - 26-5-82 வரை
**றீகல்** [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
பரிச்சே
**Parichay**
[ஹிந்தி]

கடைசி வாரம்
**ஹரன்** யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த், மாதவி
தேங்காய் சீனிவாசன்
**தில்லுமுல்லு**


# தமிழர்களின் எதிர்காலம் இருள்சூழ்ந்துள்ளது

## ஈழவேந்தன்எச்சரிக்கிருர்

(சாவகச்சேரி)

"தமிழ் மக்களின் எதிர்காலம் மிகவும் இருள் சூழ்ந்ததாக இருக்கின்றது. தமிழ் மக்கள் போத்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேய ஆட்சியின் கீழ் ஓரளவு கௌரவமாக வாழ்ந்தனர். ஆனல் கடந்த 33 வருட சிங்கள ஆட்சியில் எங்கள் உரிமைகள் எல்லாம் படிப்படியாகப் பறிக்கப்பட்டு இன்று அநாதைகளாகத்தெருவில் நிற்கிருேம். இனத்தின் தலைவன் உரிமையை விட்டுக் கொடுத்து சலுகையை எதிர் பார்க்கிருர்.

சாவகச்சேரிச் சந்தைமைதானத்தில் நடந்த ஈழ விடுதலையணிக்கூட்டத்தில்உரையாற்றிய ஈழவேந்தன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. எச். இ. அருளம்பலம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் ஈழவேந்தன் மேலும் கூறியதாவது:- தந்தை செல்வாவும் ஸ்ரீமாவோவுடனும். டட்லியுடனும் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்பொழுது சமஷ்டி ஆட்சியின் கீழ் பிரதேச சுயாட்சிமூலம் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழலாம் என்ற நம்பிக்கையின் பேரில் அவரது பேச்சு வார்த்தை இருந்தது. இப்போது அமிர் அண்ணவின் பேச்சுவார்த்தை தமிழ்ஈழப் பிரச்னையைக் குழிதோண்டிப் புதைப்பதாகவே இருக்கிறது. 6 மாதத்திற்கு தமிழ் ஈழம் பிரச்னையைக் கதைக்கக்கூடாது என்ற நிபந்தனையின் பேரிலே உயர்மட்டப் பேச்வார்த்தை நடத்துகின்ருர்கள்,

"தந்தை செல்வா போராட்டத்திற்குத் திகதிய றிவித்ததும் அரசு பயந்து அவரோடு பேச்சு வார்த்தை நடாத்தியது. ஆனல் இன்று உங்களுக்கு ஏதாவது உரிமைகள் மாவட்ட சபைக்குத் தரவேண்டுமானல் தமிழ்ஈழக் கொள்கையைக் கைவிடவேண்டுமென்ற நிபந்தனையிற் பேச்சவார்த்தை நடக்கிறது" என்ருர்.

திரு. கோவை மகேசன் உரையாற்றுகையில் கூறியதாவது;

1977ல் தமிழினம் ஒன்றுபட்டுத் தமிழீழம் அமைப்பதற்காகவே வாக்களித்தார்கள். சாதிபேதமின்றி தங்களைத் தாங்கள் ஆட்சிசெய்யவேண்டுமென விரும்பியே 56 வீத வாக்குகளை அளித்தார்கள். அடுத்த தேர்தல் சுதந்திரத் தமிழ் ஈழத்திலேயே நடைபெறும் என்ருர்கள். இன்று இவற்றை மறந்து அரசாங்கத்தோடு ஒட்டி உறவாடுகிருர்களே. தமிழனை அடக்கி வைத்துக்கொண்டு ஜனதிபதி தமிழ்த் தலைவரோடு உயர் மட்டப் பேச்சுவார்த்தை நடத்துகிருர். தந்தை செல்வா அன்று நோக்கிய அணுகுமுறை சமஷ்டி – இன்றைய அணுகுமுறை தனிநாடு.

"தமிழினம் ஒரு தேசிய இனமல்ல; அவர்களுக்கென்று ஒரு நாடில்லை. இலங்கை ஒற்றையாட்சி அமைப்பைக் கொண்ட நாடு என்று திரு. ஜெயவர்த்தன கூறிய பின்னரும் பேச்சுவார்த்தை வைக்கலாமா? ஆகவே இனித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் மூலமே இழந்த உரிமைகளைப் பெற்றெடுக்கலாம்" என்ருர்.

தமிழ் ஈழ விடுதலை அணித் தலைவர் திரு. எஸ். தர்மலிங்கம், திரு பொன். பூலோகசிங்கம், திரு, செந்தூர்ராசா உட்படப் பலர் உரையாற்றினர். (இ)

## பயிற்சிக்குத் தெரிவு

[மன்னர்]

யாழ்ப்பாணம் மருத்துவக் கல்லூரியில் இரண்டரை வருடங்கள் நடைபெறும் அப்போதிக்கரிபயிற்சிக்காக மன்னர் பட்டினத்திலிருந்து ஒருவரும், மன்னர் அரசினர் ஆதார வைத்திய சாலையில் மருந்தாளராகக் கடமையாற்றிய மூவரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான அப்போதிக்கரி பயிற்சிக்குப்பிற்கென மன்னர் பட்டினத்திலிருந்து செல்வி யேசுதாசன், மன்னர் அரசினர் ஆதார வைத்தியசாலையிலிருந்து திரு. வி. கனகரட்ணம், திரு. கே. அரியசிங்கம், திரு. ஏ. சிறிபத்மநாதன் ஆகியோரே தெரிவுசெய்யப்பட்டவர்களாகும்.

## பிரசவ

(5ம் பக்கத் தொடர்ச்சி)

நீண்டகாலத் தேவையாக இருந்து வரும் பிரவச வார்ட் ஒன்றை நிறுவ விரைவில்நடவடிக்கைஎடுக்க வேண்டும்என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது இதற்கான நிதியை பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்து தருமாறு இப்பகுதியிலுள்ள பொது நல இயக்கங்கள் எதிர்க்கட்சித் தலைவரும், காங்கேசன்துறை தொகுதி எம். பி. யுமான திரு. அ. அமிர்தலிங்கம், வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு ஆகியோரிடம் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன.

## அநுரா டானியலுக்கு ரூ. 20 லட்சம் அபராதம்

[கொழும்பு]

கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்ட ஹேராஹெட்ட எம். பி. திரு. அநுரா டானியலுக்கும் அவருடன் கூட்டாகச் செயல் பட்ட இரத்மலானை வர்த்தகரான மஹிந்தசிறி உடுமலகே என்பவருக்கும் தலா 20 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அவ் அபராதத் தொகையை பிரதம சுங்க சேகரிப்பாளர் திரு. எச். பி. திஸநாயக்கா நேற்று முன்தினம் விதித்தார்.

சுங்கப்பகுதியினரால் மேற்படி அபராதத்தொகை விதிக்கப்பட்டபோதிலும் பிரஸ்தாப நபர்கள் இருவரும் இத் தொகையைக் கட்ட மறுத்துள்ளனர். இதனையடுத்து இவர்கள் மீது கொழும்பு நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினரான திரு. அனுரா டானியல் வெளிநாடொன்றிலிருந்து திரும்பியபோது இரண்டு பிரயாணப் பைகளில் தங்கப், கைக்கடிகாரங்கள் உட்பட பெண்களுக்கான பெறுமதிமிக்க ஆடைகளையும் கொண்டு வந்திருந்ததை சுங்கப்பகுதியினர் கண்டு பிடித்திருந்தனர்.

இக் கடத்தல் சம்பந்தமாக குற்றப்புலனுய்வுத்துறை இயக்குனர் திரு. அமரசேன ராஜபக்ஷ தலைமையில் புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதும் இப் புலன் விசாரணைகளின் அறிக்கைகள் ஜனதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து ஜனதிபதி, ஹேவாஹெட்ட பாராளுமன்ற உறுப்பினரை ராஜினுமாச்செய்யும்படி கேட்டிருந்ததும் தெரிந்ததே. [கி]

## இன்று

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கொல்லன் கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலய நான்காம் திருவிழா இன்று நடைபெறுகின்றது.

இவ்விழாவில் சாத்தூர் எஸ். கணேசு, மதுரை எஸ். அம்மையப்பார், திருப்பாத்தூர் எஸ். கருப்பையா ஆகியோரின் மேளக்கச்சேரி சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெறும்.

● ● ●

(யாழ்ப்பாணம்)

நஷனல், சொனி தொலைக் காட்சிப் பெட்டிகள் வாங்குபவர்களுக்காக யாழ்ப்பாணம், எஸ். சின்னத்துரை அன் பிறதர்ஸ் நிறுவனம் நடாத்திய, சீட்டுக் குலுக்கல் இன்று மாலை இந்நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. அதிர்ஷ்டசாலிகளுக்கு யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா பரிசில்கள் வழங்குவார். பாலன் இரும்புப் பெட்டி காட்சியறையையும் திறந்து வைப்பார். (கெ)

● ● ●

(யாழ்ப்பாணம்)

அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று நடைபெறுகிறது

விசேட நிகழ்ச்சியாக தமிழகத்திலிருந்து வந்துள்ள சாத்தனூர் எஸ். என். கணேசன் கோஷ்டியினரின் நாதஸ்வரக் கச்சேரி இடம்பெறுகிறது. [இ]

## விமலராசா.....

[-1ம் பக்கத் தொடர்ச்சி]

எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் கேட்டுள்ளார்.

இது சம்பந்தமாக எதிர்க்கட்சி முதல்வரினால் கடிதங்கள் யாழ். பல்கலைக்கழகத்திலுள்ள 15 பிரிவுத் தலைவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

''யாழ். பல்கலைக்கழகமாணவர்கள், மாணவன் விமலராசாவை விடுதலைசெய்யவேண்டும்.'' என்ற கோரிக்கையை முன்வைத்து போராட்டம் மேற்கொண்டிருக்கின்றனர். இதையொட்டி நாங்கள் சில நடவடிக்கைகளை மேற்கொண்டு, விமலராசாவையும் விசாரணையின்றிக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் வேறு பலரையும் விடுதலை செய்விக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் ஏற்பட்டிருக்கின்றன. நாம் மேற்கொண்ட நடவடிக்கைகளையும், மேலும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் துணைவேந்தர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள், மாணவர் மன்றப்பிரதிநிதிகள் ஆகியோருடன் கலந்துரையாட விரும்புகின்றோம். 1982-05-26ம் திகதி (இன்று) புதன்கிழமை காலை 10-00மணிக்கு பல்கலைக்கழகத்தில் உறுப்பினர்களைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்''. இவ்விதமாக எதிர்க்கட்சித் தலைவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். [மா]

## பிரபாகரன்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தேக நபர்களை இலங்கைக்கு கொண்டுவரும் பொருட்டு நடவடிக்கைகளை எடுக்கவும் இலங்கைப் பொலிஸ் மா அதிபர் திரு. ருத்ரா ராஜசிங்கம் இன்று புதுடில்லி வந்துசேர்ந்துள்ளார்.

இதேநேரத்தில் தமிழக அரசு மத்தியஅரசுடன் ஆலோசனை நடத்திவருகிறது.

நிலைமை இவ்வாறிருக்க, பிரபாகரன் கைது விவகாரமாக சென்னையிலிருந்து இந்திய மத்திய அரசுக்கு அதிகமான அவசரத்தந்திகள் அனுப்பப்பட்டுள்ளன என்றும் பிரபாகரனை இலங்கை பொலிஸாரிடம் ஒப்படைக்க வேண்டாம் என்று தந்திகளில் வலியுறுத்தப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

## கடைகளைப் பூட்டுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

''சிறையில் சித்திரவதைக்குள்ளாகும் தமிழ்பேசும் இளைஞர்களை விடுதலை செய்யவேண்டும் அல்லது விசாரணைசெய்ய வேண்டும்'' என்ற கோரிக்கையை முன்வைத்து இன்று கடைகளையும், தனியார் நிறுவனங்களையும் பூட்டி அனுதாபம் தெரிவிக்குமாறு ஈழமாணவர் பொதுமன்றம் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது. [மா]

## இன்றும் நடக்கிறது

தேசிய நலன் கருதி, பொதுமக்களின் பாதுகாப்பை உத்தேசித்து ஒரு நாட்டில் ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள் தடை செய்யப்படுவது பெரிய செய்தி அல்ல. ஆனால்...........

அசாதாரணச் செய்தி [1]: உலகதினமான மே தினத்தில் நமது நாட்டின் தலைநகர் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இந்தநாட்டின் முதுகெலும்பான தொழிலாளர்களின் உரிமை ஊர்வலம் தடைசெய்யப்பட்டது.

அசாதாரணச் செய்தி [2]: சிங்களவரின் உரிமையைப் பாதுகாக்க, துட்டகைமுனு மன்னனின் சிலையை ஏந்திக் கொண்டு கொழும்பு விகாரமகாதேவி பூங்காவிலிருந்து அனுராதபுரத்துக்கு மோட்டார் பவனி ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அனுராதபுரம் கூட்டத்தில் எதிரொலித்தவை; ''சிங்கள மக்கள் ஒன்றிணைந்தால் சிங்கள அரசாங்கத்தை அமைக்கமுடியும் யாழ்ப்பாணத்தில் ஒரு கையளவு நிலத்தையாவது சிங்கள மக்கள் வாங்க முடியாதிருக்கின்றார்கள். சிங்கள இனத்தவரின் உரிமைகள் பற்றிப்பேச யாரும் முன்வருகிறார்களில்லை!''

'ஊடுருவி'

## பாப்பரசரின் பிரிட்டன் விஜயம்

வத்திக்கான், மே. 25

பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் ஆறுநாள் விஜயத்தை மேற்கொண்டு எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிரிட்டன் செல்லவுள்ளாரென அறிவிக்கப்பட்டது.

அங்கு அவர் சன்ரபெரியில் நடைபெறும் திருச்சபை வைபவமொன்றிலும் கலந்து கொள்வாரென்றும் கூறப்பட்டது. (வெ)

## நுஷ்ரத்பூட்டோ பிரவேசிக்கத் தடை

இஸ்லாமபாத், மே. 5

தூக் லிடப்பட்ட பாகிஸ்தானின் முன்னாள் பிரதம மந்திரி சுல்பிகார் அலி பூட்டோவின் மனைவி நுஷ்ரத் பூட்டோவிற்கு அந்நாட்டின் வடமேற்கு எல்லை மாகாணத்தில் பிரவேசிக்கவோ, தங்கியிருக்கவோ அரசு தடைவிதித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது. [வெ]


அகில உலகிலும் முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்ட 'பிக்' செய்யமுடியாத
பூரண பாதுகாப்பளிக்கும் பூட்டான

பாலன் லீவர் பூட்டு பொருத்தப்பட்ட

# பாலன்
# இரும்புப் பெட்டகங்கள்




**PAALAN**
**IRON SAFE**

விற்பனை விநியோக ஆரம்ப விழா

யாழ். நகரின் மிகப்பெரும் வியாபார ஸ்தாபனமும்
'பாலன்' தயாரிப்புகளின் விற்பனையாளருமான

**எஸ். சின்னத்துரை அன் பிரதர்**

காட்சி அறையில்

**இன்று (26-5-82) புதன்கிழமை மாலை 3 மணிக்கு**

யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா அவர்கள்
முன்னிலையில் நடைபெறவுள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவரையும் இவ்விழாவில் கலந்துகொண்டு
சிறப்பிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

தயாரிப்பாளர்கள்:

PAALAN

A. C. பாலன்
பூட்டு, பெட்டக பொறியியலாளர்களும்
தயாரிப்பாளர்களும்.
550, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.

விற்பனையாளர்கள்:

எஸ். சின்னத்துரை அன் பிரதர்
39. கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 283 - 281
தந்தி: 'கல்கி'


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஷு மே மீ 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81. Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.